S. Ragupathy

கிடைக்குமிடம்:
பாரி புத்தக நிலையம்,
போக்ஸ் 4178. மதுரை-1

# விடுகதைக் களஞ்சியம்

பாரதி புத்தக நிலையம்,
போன் 4178. மதுரை-1.

# செல்வி பதிப்பகத்தாரின்

## சிறுவர் நூல்கள்

| | | |
|---|---|---|
| வேள்பாரி | 0 | 50 |
| நட்சத்திரக் குழந்தை | 1 | 00 |
| சூரப்புலி | 1 | 00 |
| தாயின் மணிக்கொடி | 1 | 00 |
| தொண்டைமான் இளந்திரையன் | 1 | 00 |
| குழந்தைப் பாடல்கள் | 1 | 50 |
| [illegible] நீதிக்கதைகள் | 2 | 00 |
| தமிழகப் பழமொழிகள் | 2 | 00 |
| திசை மாற்றம் | 2 | 00 |
| விடுகதைக் களஞ்சியம் | 2 | 50 |
| ஊமை ராஜா | 3 | 00 |

நூல் நிலையப் பதிப்பு

# விடுகதைக் களஞ்சியம்

தொகுப்பாசிரியர் :

ரோஜா முத்தையா

செல்வி பதிப்பகம்

காரைக்குடி

செல்வி : 36

முதற்பதிப்பு: நவம்பர் 1961

இரண்டாவது திருந்திய பதிப்பு: மே 1966

உரிமை: பதிவு செய்யப்பெற்றது.

O 31 : 6 x
K6

நூல் நிலையப் பதிப்பு ரு. 2—50

அச்சிட்டோர்: சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-1.

... ... ... ... ... ...

அது என்ன ?

கேள்வியைப் போடுங்கள் ?

விடைகள் எங்கே ?

சரியா ?, தவறு ?

யாருக்கு வெற்றி ?

பதிலுக்குக் கேள்வி ?

இப்படி ஒருவரை யொருவர் திக்குமுக்காடச் செய்து வெற்றி காணும் வீரமும் பெருமிதமும் கொள்ளத்தக்க விடுகதைகள் தாம் இப்புதிய தொகுப்பு நூல்.

படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை! சிந்தனையைத் தூண்டும் நல்ல பொழுது போக்கான விளையாட்டு.

அறிவு வளர்ச்சிக்கு அருமையான

புத்தகம்

விடுகதைக் களஞ்சியம்

# செல்வி பதிப்பகத்தாரின் பதிப்புரை

1025 விடுகதைகளைத் தேர்ந்தெடுத்து இப்பதிப்பில் வெளியிட்டிருக்கிறோம்.

சிறுவர் சிறுமியர், நடுத்தரவயதினர், பெரியவர்கள் ஆகிய அனைவருக்கும் சிந்தனை விருந்து இவ் விடுகதைகள் !

சிந்தனையைத் தூண்டும் இவ் விடுகதைகளை ஒருவர்க் கொருவர் பரிமாறிக் கொள்ள, பயிற்சி மிக்கோரனைவரும் புதிய விடுகதைகளை ஆக்கும் திறனடைகிறார்கள் என்பதில் வியப்பில்லை.

நாள்தோறும் விடுகதைகள் வளர்ச்சி யடைந்து கொண்டே வருகின்றன. இவ் விருந்தில் திளைக்கும் அனைவரும் தாம் அறியும் புதிய விடுகதைகளை மேலும் மேலும் எங்கட்கு அனுப்பினால் அடுத்தடுத்த பதிப்புக்களில் சேர்த்துப் பதிப்பித்து வெளியிடுகிறோம்.

உங்கள் சிந்தனைக்கு விருந்தாக இந்நூலை வெளியிடுவதில் மிக மகிழ்ச்சியடைகிறோம்.

வீர. சிவராமன்.

அறிவு வளர்ச்சியடைவதற்கு விஞ்ஞான முறையில் உணவும் மருந்தும் சாப்பிடும் காலம் இது.

அறிவு வளம்பெற அந்த மருந்துகள் பயன்படுமோ என்னவோ – இந்த நூல் நிச்சயம் எல்லோருக்கும் பயன்படும்.

ரோஜா முத்தையா

# விடுகதைக் களஞ்சியம்

அது என்ன?

1 தந்தைக்கு முன்னே தரணியில் நிற்பான்.
2 காம்பு இல்லாத காய் என்ன காய்?
3 பிறை கவ்வி மலை நடக்கும்.
4 நடலாம்; பிடுங்க முடியாது.
5 வெள்ளைக் குதிரை வேலியைத் தாண்டுது.
6 பச்சைப் பாம்பு கல்லைத் தூக்குது.
7 தாய் பரட்டைச்சி, மகள் உருட்டைச்சி.
8 உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ.
9 இரண்டு கிணறுக்கு ஒரு பாலம்.
10 வேலிக்குள்ளே வெண்கலக் குண்டான்.
11 சேற்றுக்குள் செங்கோழி முட்டை.
12 இருட்டு வீட்டில் முரட்டு சிப்பாய்.

13 குற்றம் இல்லாமல் குடுமி பிடிக்கிறான்.
14 சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம்.
15 அறுக்க உதவாத கறுக்கு அரிவாள்.
16 நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள்.
17 பகலில் தூங்கி இரவில் விழிப்பவன்.
18 அடி மலர்ந்து நுனி மலராத பூ.
19 வெள்ளை மாடு வாலால் நீர் குடிக்குது.
20 இருட்டு அறையில் முத்து வரிசை.
21 அறைகள் அறுநூறு; அத்தனையும் ஒரு அளவு.
22 மொட்டை மரத்திலே முப்பது காகம்.
23 பூ இருந்தும் பறிப்பதில்லை.
24 மண்ணுக்குள்ளே வைரம்.
25 ஐந்து ஊருக்கு ஒரே மந்தை
26 கருத்த பாறைக்கு வெளுத்த வேர்.
27 கையிலே கணக்குப் போடும் கணக்கப்பிள்ளை.
28 ஒரு சாண் கட்டைக்கு அரைச் சாண் மூடி.
29 ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை.
30 ஒரு சிமிழியில் மூன்று பெண்கள்.
31 பிடிக்கவே முடியாத கள்ளன்.
32 ஓடும் குதிரைக்கு வால் தேய்கிறது.
33 மேனி எல்லாம் கண்கள் மிக உண்டு.
34 குண்டுச் சட்டியிலே கெண்டை மீன்.
35 அந்தி கிழக்கே அதிகாலை மேற்கே.

36 மண்ணுக்குள்ளே பொன்னம்மாள்.
37 சிவப்புச் சட்டிக்கு கருப்பு மூடி.
38 கையைப் பிடித்தார்; காசு கேட்டார்.
39 குதி குதித்தான்; பல்லை இளித்தான்.
40 பட்ட மரத்திலே பம்பரம் ஆடுது.
41 ஒல்லியான மனிதனுக்கு ஒரே காது.
42 தொட்டால் பிடித்துக் கொள்ளும்; பசை அல்ல.
43 மூடாத வாய்க்கு முழம் வால்.
44 ஆயிரம் குழந்தைகளுக்கு அரைஞாண் ஒன்று.
45 வளைக்க முடியும் ஒடிக்க முடியாது.
46 குண்டு மனிதனுக்கு இரண்டு முண்டாசு.
47 நூறு கிளிகளுக்கு ஒரே வாய்.
48 கட்டைப் பனையில் எட்டுக் கலயம்.
49 பட்டுப்பை நிறைய பவுன் காசு.
50 திரி இல்லாத விளக்கு.
51 அடிப்பார் பிடிக்கமாட்டார்.
52 வருத்தம் இல்லாத சுமை.
53 ஒன்பது பிள்ளைக்கும் ஒரே குடுமி.
54 நாலு கால் உண்டு; வீச வால் இல்லை.
55 முட்டிக் குதிரைக்கு முன்னூறு கால்.
56 மண்ணுக்குள் மயிர் கோதி.
57 கோழி மேயுது குடல் வேகுது.
58 செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்.
59 செடியைச் சுற்றிச் செந்துருக்கும்.

60 நடக்க முடியாது; நகரும்.
61 ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு.
62 அடி மலர்ந்து நுனி மலராத பூ.
63 வீதியை அகலமாக்குவது எது?
64 ஒரு கிணற்றில் ஒரே தவளை.
65 மூடாத வாய்க்கு முழம் நீள நாக்கு.
66 ஊளை மூக்கன் சந்தைக்குப் போகிறான்.
67 பாலாற்றில் கருப்பு மீன் மேய்து.
68 தீனிக்குக் குறைவில்லை தீர்த்தமுண்டால் மரணம்.
69 தம்படிக் குதிரை வாலுக்கு லகாம்.
70 முகத்தைக் காட்டுவான் முதுகைக் காட்டமாட்டான்.
71 இரண்டு வீட்டுக்கு ஒரு விட்டம்.
72 தேர் அசைய, பூ உதிர, என்ன?
73 இக்குணிப் பிள்ளைக்கு இக்குணி நாமம்.
74 கிணற்றுக்குள்ளே வட்டக் கிண்ணி மிதக்கிறது.
75 செம்பு நிறையச் சிகப்பு முத்து.
76 கோலளவு பெண்ணிற்கு குடத்தளவு சொருக்கு.
77 குளத்தில் அம்புகள் பாய்கிறது.
78 இரு கடல் நடுவில் இலங்கும் பாலம்.
79 ஒரு அகப்பை மாவாலே ஊரெல்லாம் கலியாணம்.
80 தண்டு இல்லாத வட்ட வட்ட இலை.
81 இருட்டுக் காட்டில் குருட்டுப் பண்ணி.
82 வீட்டில் இருக்கிற அண்டாவுக்கு அடைப்பில்லை.

83 பெட்டியைத் திறந்தால் பெருங்காயம் மணக்குது.

84 போட்டால் தெரியும் இங்கிலீஷ் முட்டை.

85 கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம்.

86 பல பேருக்கு ஒரு குடுமி.

87 கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும்.

88 கழுத்தை அறுத்தால் கண் தெரியும்.

89 ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது கை.

90 நெட்டி இல்லாத வட்ட இலை.

91 வாசலில் பூத்திருக்கும் வாழ்வரசி.

92 பிறந்தது முதல் வயிற்றினால் போகிறது.

93 பெரு வெங்காயம் தலையிலே சிங்காரம்.

94 திருப்பதி போனாலும் திரும்பாத பல்லக்கு.

95 வாயுவை விட வேகமானது.

96 அப்பாடா என்ற காய் காய்க்கும்.

97 பாரினில் பறவாத கொக்கு, பாயாத வேங்கை.

98 குட்டியும் போடும், குவலயத்திலும் பறக்கும்.

99 தாழ்ப்பாளின் கீழ் கோபாலசாமி.

100 தோண்டுவான் முடக்குவான்.

101 மணி அடித்தால் மலைப்பாம்பு நகரும்.

102 என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன்.

103 பாரினில் காய்த்தும் பழுக்காத மரம்.

104 ஜாடிமேலே குரங்கு.

105 ஒரு பொறி பொறிக்க ஊரெல்லாம் பொறி.

106 செம்பு நிறையக் கெம்பு.

107 சின்ன வெங்காரம் வீடெல்லாம் சிங்காரம்.
108 ஊருக்கெல்லாம் ஒரே கல்.
109 சின்ன வீட்டு நிறையச் சிரு.
110 கிண்ணியைப் போலப் பூ பூக்கும்.
111 பெரிய கடாரங்காய் போலக் காய் காய்க்கும்.
112 பழமாகாப் பழம் என்ன பழம்?
113 பூவாகாப் பூ என்ன பூ?
114 பறிக்கப் பறிக்கப் பெரிதாகிறது.
115 எத்தனை பேர் ஏறினும் சலியாத குதிரை.
116 உயிரில்லாப் பறவை ஊர் ஊராகப் பறக்கும்.
117 காற்று ஜீவனம் கண்ணிடை வாசமாம்.
118 வீடில்லா நகரங்கள் நீரில்லா சமுத்திரங்கள்.
119 நாற்கால்காரி நடவாள் படுப்பாள்.
120 கண்ணுண்டு செவியில்லை கண்டிடும் கேட்டிடும்.
121 தலையில்லை இடையில்லை கையுண்டு விரலில்லை.
122 எட்டாக் கொம்பில் மிட்டாய்ப் பொட்டலம்.
123 கோணி ஏகிக் கேணியில் விழுந்தது.
124 குட்டைப் பெண்ணுக்குப் பெட்டிப் புடவைகள்.
125 முள்ளில்லாத மீன் என்ன மீன்?
126 இரண்டு வீட்டுக்கு ஒரு தூலம்.
127 ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமியாயிற்று.
128 கொக்கு நிற்க நிற்க, குளம் வற்ற வற்ற.
129 கிணற்றைச் சுற்றிப் புல்.
130 ஊருக்கெல்லாம் ஒரு துப்பட்டி.
131 உரித்துவிட்ட குருவி ஊருக்குப் போகிறது.

132 துக்குணி சிறுசிறுக்கு முக்கலக் கந்தை.
133 சுட்டுவிட்டு குருவி கப்பலேறுது.
134 குத்துக் குருவிக்கு முழம் வால்.
135 காட்டிலே துளி ரத்தம்.
136 ஓ ஓ உயர்ந்த மரம், உருவினுல் பிடி காணுது.
137 தச்சன் இழைக்காத மரம் என்ன மரம்?
138 ஏருத மரத்திலே எண்ணுயிரம் காய்.
139 காற்றுடி பறப்பதேன்? கல்வி வளர்வதேன்?
140 காட்டுக்குள்ளே அரைச் சட்டி ரத்தம்.
141 கிணற்றுக்குள்ளே கிண்ணி மிதக்கிறது.
142 கிணற்றைச் சுற்றி அகத்தி மரம்.
143 வளைக்கலாம் நுழைக்கலாம் ஒடிக்க முடியாது.
144 ஒரே புட்டி இரண்டு தைலம்.
145 ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.
146 ராசாமகள் பூ இல்லாமல் சடை போடமாட்டாள்.
147 நடுக்காட்டிலேயிருந்து திருடன்கயிறுவிடுகிருன்.
148 மார்பு அளவு மயிரிலே மயிலைக் காளை மேயுது.
149 சப்பட்டைக் கல்லைச் சுற்றி ஐந்து அவரைக்காய்.
150 கனியிலே கனி, திகட்டாத கனி, என்ன கனி?
151 நாரிலே நாரு என்ன நாரு?
152 படியிலேயும் படி என்ன படி?
153 ஆகாரத்திலேயும் ஆகாரம் என்ன ஆகாரம்?
154 பட்டையிலே பட்டை என்ன பட்டை?
155 ஆனையிலே ஆனை என்ன ஆனை?

156 அகத்திலே அகம் என்ன அகம்?

157 தாய் தெருவிலே, மகள் கொலுவிலே.

158 அள்ளலாம், கிள்ள முடியாது.

159 எலும்பில்லா மனிதன் ஏறுகிருன்.

160 பறவையல்ல; பறக்கிறது!

161 மண்ணுக்குள்ளே வெள்ளை மீன்.

162 நடுக்காட்டில் ஒரு ஈட்டி.

163 நடுக்காட்டில் வெள்ளைவேட்டி விரித்துக் கிடக்கு.

164 வகை புகை தகை.

165 தோல் இருக்கச் சுளை விழுங்க.

166 அண்ணன் தம்பி மூவருக்கும் ஒரே முகம்.

167 உருப்படியில்லாத கல், கல், கல், கல், கல் சொல்.

168 ஒரு முழக் குழியிலே
கால் படி மல்லிகைப் பூ.

169 ஒற்றைக் கால் குருவி
உழக்கு முட்டை இடும்.

170 உள்ளூர் உத்தமிக்கு
உள்ளங் கையில் ஓட்டை.

171 எங்கள் வீட்டு எருமைக்கு
வருஷத்துக்கு ஒரு மேய்ச்சல்.

172 வெள்ளைக் கத்தரிக்காய்
கள்ளக் கூக்குரல் போடுது.

173 மூன்று கால் யானை
தின்பதெல்லாம் கரும்பு.

174 சின்னஞ்சிறு வீட்டிலே
சிப்பாய்கள் பல பேரு.

175 தன்னைத்தானே பலி கொடுப்பான்
மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பான்.

176 பல்லைப் பிடித்து அழுத்தினல்
பதறிப் பதறி அழுவான்.

177 கல்லால் ஆன குதிரைக்கு
மரத்தாலே மூக்கணங்கயிறு.

178 ஆற்ருேரம் போகிற கள்ளக் கடாவுக்கு
கிள்ளிப் பிடிக்க மயிர் இல்லை.

179 அம்மா கொடுத்த தட்டிலே
தண்ணீர் விட்டால் நிற்கவில்லை.

180 காவி உடை அணியாத கள்ளத் தவசி
கரை ஓரத்தில் கடுந்தவம் செய்கிருன்.

181 உருண்டிருக்கும் பாறை மேலே
திரண்டு நிற்குது கோரைப் புல்.

182 வாயைத் திறந்த வாயாடி
ஓயாமல் அழுகிருன், யாரடி?

183 சின்னப் பொடியனுக்கு
அரண்மனையிலே வேலை.

184 நோயில்லாமல் நொடியில்லாமல்
அனத்துபவன் யார்?

185 பாக்கு எண்ண முடியவில்லை
பாய் சுருட்ட முடியவில்லை.

186 போகும் போது கிழவி
வரும்போது குமரி.

187 ஒரு காசுக்கு வடை வாங்கி
உலகத்துக்கே கொடுத்தேன்.

188 நாலுகால் நகாரி
வால் இல்லாக் கெடேரி.

189 இருட்டான இருட்டிலே இங்கிலீஷ் ரோட்டிலே
பாதாள லெட்சுமி பந்து விளையாடுகிருள்.

190 ஓகோ ராசா உயர்ந்த ராசா
தோள்மேல் என்ன தொண்ணூறு முடிச்சு?

191 கல்லிலே மேய்ந்து கயத்திலே நீராடி
புல்லிலே படுத்தார் புவனத்து ராசா.

192 மூன்று கொடியோடி முச்சந்தில் கூடி
கொள்ளவாளம்பட்டு கொடி கட்டி ஆடுமாம்.

193 சுருங்காமல் பறப்பது என்ன மந்திரி?
சிமிட்டாமல் விழிக்குதே அதுதான் ராசா.

194 வானத்தில் வளைந்த தங்கக் கம்பி
நீட்ட முடியாது, நகை செய்ய முடியாது.

195 பச்சைப் பெட்டியில் பத்துச் சரம் முத்து
எடுக்கலாம் தொடுக்க முடியாது.

196 உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே
பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது.

197 காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும்
முக்காடு போட்டால் மூலையில் அமரும்.

198 ஆடு மேய்கிறது; கறி வேகிறது;
தோல் காய்கிறது.

199 கால்வாயில் தண்ணீர் போக
கன்னிக் கோழி முட்டையிட.

200 பச்சைக் கோழிக்குப் பச்சை முட்டை;
பொறிச்சா வெள்ளைக் குஞ்சு.

201 காட்டிலே இருக்கிற கணக்கம்மாள்
வீட்டிலே வந்து விளையாடுகிருள்.

202 வீட்டிற்கு வந்த விருந்தாளியை
வரவேற்க ஆள் இல்லை.

203 கோடி கோடி வெள்ளிப் பணம்
ஓடி விடுது சாலைப் பயணம்.

204 உச்சிக் குடுமியான் சந்தைக்குப் போனுன்
ஊளை மூக்கனும் சந்தைக்குப் போனுன்.

205 டாக்டர் வந்தார், ஊசி போட்டார்
பீஸ் வாங்காமல் போய் விட்டார்.

206 பச்சைச் சேலைக்காரி பகட்டுக்காரி
தொட்டால் கோபக்காரி.

207 அடிபெருத்தேன் குந்தாணியானேன்
தலைவிரித்தேன் சடைச்சியானேன்.

208 பந்து பந்தாட புளியம் பந்தாட
நின்று தாக்கடா உயிரைப் போக்கடா.

209 பகலில் சுருண்டு கிடந்தான்
இரவில் விரிந்து கிடந்தான்.

210 தண்ணீரில் நீந்தி வரும்
தரையில் தாண்டி வரும்.

211 ஆனை அசைந்து தின்னும்
அடுப்பு அசையாமல் தின்னும்.

212 வீட்டைச் சுற்றிப் புளியமரம்
உலுக்கினுல் கலகல என்கும்.

213 கோணல் எத்தனை இருந்தாலும்
குணமும் மணமும் குறையாது.

214 எங்க அம்மா சின்னம்மா
சேலை கட்டாத பொன்னம்மா.

215 பரந்த காட்டேறிக்குப்
பக்கமெல்லாம் சடை.

216 கண் காண உருவம் உண்டு
கட்டிப் பிடிக்க உடல் இல்லை.

217 அதோ போகிறான் குள்ளன்
அவன் காலடி தெரியவில்லை.

218 புதைத்து வைத்த பொருள்
பொத்துக்கிட்டு வருது.

219 கீரை விதைப்பதேன்?
கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?

220 மொட்டைத் தாத்தாவுக்கு
தலையிலே இரட்டைப் பிளவு.

221 தச்சன் செய்யாத பெட்டி
தானே திறந்து மூடும் பெட்டி.

222 பாறைமேல் இட்ட விதை
பார்ப்பவர் வியக்க முளைத்த விதை.

223 உயிர் இல்லாத நீதிபதி
ஒழுங்காக நியாயம் சொல்கிறார்.

224 தோகை மயிலாள் சொகுசுக்காரி
தோட்டி மகன் கையில் தொல்லைப்படுகிறாள்.

225 நடுவிலே இருக்கும் கருப்பு ராசாவுக்கு
நாலாபக்கமும் வெள்ளையர் காவல்.

226 பச்சைக்கிளி பறக்க முடியாத கிளி
கொம்பிலே இருக்கும் குள்ளக் கிளி.

227 தேடித் தேடிச் சேர்த்த பொருளை
நாடி வந்தவன் நாசமாக்கி விட்டான்.

228 உயிரில்லாக் குதிரைமீது ஏறி
மயிரில்லா மான் பிடிக்கப் போனான்.

229 காற்று இல்லாத கண்ணாடிக் குண்டில்
மஞ்சக்கோழி மயங்கிக் கிடக்கு.

230 தண்ணீர் இல்லாத தடாகத்தில்
தாவிப்பாயுது ஒரு கப்பல்.

231 ஓட்டை வாயனுக்கு
விழுந்த பல் முளைக்கவில்லை.

232 மலைகள் பிறந்த நாட்டிலே
இலைகள் கவிழ்ந்த மரம்.

233 கணுக்கால் நீரில்
கரடி நீச்சல் போடுது.

234 தலைமேல் முளைத்திருக்கும்
இலையில்லா மரம்.

235 நடக்கத் தெரியாதவன்
நட்டுவனுக்கு வழி காட்டுகிறான்.

236 தான் ஏறும் குதிரைக்கு
உடல் எல்லாம் ஓட்டை.

237 மொட்டைத் தட்டிலே
எட்டுப் பேர் பயணம்.

238 வந்ததை எல்லாம் வாங்கத் தெரியும்
வாங்கியதை எல்லாம் வழங்கத் தெரியாது.

239 ஒருசாண் குச்சிக்குள்ளே
ஒளிந்திருக்கான் கறுப்பு மனிதன்.

240 முதுகுமேல் இருப்பது கூடு
அது முத்தம்மாளுக்கு வீடு.

241 காலையில் வந்த விருந்தாளி
மாலையில் மறைந்து விட்டார்.

242 கோட்டையைச் சுற்றி மதில் சுவர்
உள்ளே மறைந்திருக்கான் வேட்டைக்காரன்.

243 இரண்டு தோட்டம்; நான்கு வேலி
பூப் பூத்தால் பூந்தோட்டம் பாழ்.

244 ஒத்தைக்கால் குள்ளனுக்கு
எட்டுக் கை.

245 இவ்வூரிலே தாளித்தால்
ஈரோட்டில் மணக்குமாம்.

246 சண்டையில்லாமல் வழக்கில்லாமல்
குடுமி பிடிப்பவன் யார்?

247 அந்தரமான குகையிலே
சுந்தரமான பெண் ஆடுகிறாள்.

248 ஓங்கி உயர்ந்தாள் ஒரு பிள்ளை பெற்றாள்
உடனே செத்தாள்.

249 ஒரு தோட்டத்திலே பத்து மரம்
அசைக்க முடியும் பிடுங்க முடியாது.

250 மச்சிக்குள்ளே குச்சி
குச்சிக்குள்ளே தொப்பி.

251 காலில்லாப் பந்தல்
காணக்காண விநோதம்.

252 முத்து முத்தாய்த் தோரணம்
தரையில் விழுந்து ஓடுது.

253 நான்கு காலுண்டு, நாற்காலி அல்ல
மேலே விரிப்புண்டு, பல்லாக்கும் அல்ல.

254 குள்ளப் பொண்ணு குலுக்கி நடந்தால்
கூடக் கூடப் போகவேண்டும்.

255 அழகு அழகாய் பூ பூக்கும்
அம்மாடி என்று காய் காய்க்கும்.

256 ஆனை விரும்பும், சேனை விரும்பும்
அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும்.

257 ராத்திரி பிறந்த பையன்
தலைப்பாவுடன் பிறந்தான்.

258 கால் இல்லாத மனிதன்
ஐந்து நிமிடத்தில் மறைகிறான்.

259 எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது
எங்கள் அம்மா புடவையை மடிக்க முடியாது.

260 ஏழுமலைக் கந்தப்புறம்
எருமைக்கடா கத்துது.

261 ஆனை போய் ஆறு மாதம்
ஆய்தாரை அப்படியே இருக்கிறது.

262 அம்மான் அகத்துக் கொல்லையிலே
பட்டாக்கத்தி தொங்குகிறது.

263 நட்டமாய் நிற்கிறவனுக்கு
நறுக்கு நறுக்கென்று கடிக்கும் வேலை.

264 அடே புடே என்பான்
வீட்டை விட்டு வெளியேற மாட்டான்.

265 நான் பெற்ற பிள்ளைக்கு
ஒற்றைக் கண்.

266 நான் புகாத பொட்டுக்குள்ளே
தம்பி பஞ்சுப்பிள்ளை புகுந்துவிட்டான்.

267 எங்கள் அப்பா சப்பாணி
எங்கள் அம்மா குந்தாணி.

268 நூல் இல்லை ஊசி உண்டு
வாய் இல்லை, பாடும்.

269 மனிதன் போடாத பந்தலில்
மலர்ந்து கிடக்குது பூ.

270 நான் ஏறும் குதிரைக்கு
உடம்பெல்லாம் ஓட்டை.

271 இந்த ஊரிலே அடிபட்டவன்
அடுத்த ஊரிலே போய் சொல்கிருன்.

272 அடித்தாலும் ஓடாது சண்டிமாடு
குத்தினுலும் சாவாது நொண்டிமாடு.

273 உன்னிடம் வருவேன்
உன் காலைத் தொட்டுப் பார்ப்பேன்.

274 ஆழக் குழிபறித்து நீள விதைபோட்டு
வருஷம் ஐந்தாகியும் முளைத்து வரவில்லை.

275 கருப்புத்தாள் வெள்ளைக் குதிரை
ஒருவன் ஏறுவான் ஒருவன் இறங்குவான்.

276 பிறக்கும்போது சுருங்கி இருப்பாள்
பிறந்த பின்பு விரிந்து நிற்பாள்.

277 கிளையில்லாத சவுக்கு மரம்
வெட்ட வெட்ட வளருது.

278 இருட்டிலே எழுவார் எங்கள் தாத்தா
உருட்டிடுவார் பானையை எங்கள் தாத்தா.

279 மொட்டைப் பனையிலிருந்து
பூச் சொரிகிறது.

280 குளிர் இல்லாமல் கூதல் இல்லாமல்
குளிர் காய்பவன் யார்?

281 உச்சாணிக் கிளையிலே
உரல் கட்டித் தொங்குது.

282 அரைத்தது முளைக்கும்
பொரித்தது நடக்கும்.

283 மாந்துளிர், மரபிசினி
வெட்டிவேர், கல்லெண்ணை.

284 செம்பட்டு உடை அழகி
தலைகீழே குடை பிடிப்பாள்.

285 விட்டம்போட்டு வீடு கட்டினேன்
விசிறி வைக்க இடமில்லை.

286 விரிந்த ஏரியிலே
வெள்ளி ஓடம் மிதக்கிறது.

287 கொம்படா கொம்படா புளியங் கொம்படா
நின்று தாக்கடா உயிரைப் போக்கடா.

288 கடித்தால் கடிபடாது
பிடித்தால் பிடிபடாது.

289 நங்கையர் என்னைப் பேசுவார் இழிவாய்
நான் இல்லாவிடில் நாறிப்போகும் வீடெல்லாம்.

290 ஒன்றை ஒருவனுக்குக் கொடுக்கிறாய்
அதையே நீயும் வைத்துக்கொள்கிறாய்.

291 கண்ணால் பார்க்கலாம்
கையால் பிடிக்க முடியாது.

292 காட்டிலே பெண் பிறந்தது
கன்னியர் கையாலே குத்துப்பட்டது.

293 அடுக்கடுக்காய் பட்டுடுத்தி
அமர்ந்திடுவாள் கடைவாசலில்.

294 முதுகிலே மூட்டை சுமந்து
மூன்று மணிக்கு முழம்போவான்.

295 பார்த்தால் கல்தான்
பல்பட்டால் தண்ணீர்தான்.

296 மூடியிருக்குது குண்டுக்கோட்டை
மூட்டைக்குள் இருக்குது நெல்மூட்டை.

297 ஓடுவான்; நிற்கமாட்டான்
ஒளிந்து கொள்வான்; வெளி வருவான்.

298 ஆறு பைசாவுக்கு ஆறேழு காதம் பறந்து
அடிபட்டுக் குத்துப்பட்டு வீடுவந்து கிடக்கும்.

299 இத்தனையூண்டு பூனைக்குட்டி
வைத்ததை எல்லாம் சுமக்குது.

300 இறந்த மாட்டை
அலற அலற அடிக்கிறான்.

301 உள்ளங்கை சர்க்கரை
ஊருக்கெல்லாம் சர்க்கரை.

302 காய் என்று கண்டது உண்டு
கனி என்று தின்றது இல்லை.

303 கட்டுப்பட்டு இருந்த மகளை
விட்டுப் பிரிந்து வந்தாள்.

304 கோயில் குளம் இல்லாமல்
கொட்டித் திரிகிறான் ஒருவன்.

305 செத்துக் காய்ந்த மாடு
சந்தைக்குப் போகிறது.

306 தரக்கா புரக்கான்
சந்தைக்குப் போகிறான்.

307 பிள்ளை பிள்ளையைப் பிடித்து
பிள்ளையில் வைத்துத் தின்றது.

308 தச்சர் கொத்தர் செய்யாத தேர்
தானே கிளம்பும் சித்திரத் தேர்.

309 விழித்திருக்கும் போதே
அடித்துக்கொண்டு இருக்கிருன்.

310 முட்டைக்கு மூன்று கண்
அட்டைக்கு ஆயிரம் கண்.

311 ஆகாயத்திலே அங்க வஸ்திரம்
ஆறப் போட்டிருக்கிறது.

312 விரித்த தலை முடிக்கமாட்டாள்
விரும்பி அவள் பேசமாட்டாள்.

313 அவிழ்ந்த கூந்தல் முடியாத அணங்கு
அவள் பிள்ளைக்கு ஆயிரம் பெயர்.

314 ஒற்றைக் காலில் ஆடுவான்
ஓய்ந்து போனல் படுப்பான்.

315 தெரிந்து காய் காய்க்கும்
தெரியாமல் பூ பூக்கும்.

316 நுனி சிவப்பு, அடி பச்சை
நடு வெள்ளை, நமது பிள்ளை.

317 பார்ப்பதற்கு ஐந்து கால்
எண்ணுவதற்கு நான்கு கால்.

318 சட்டையைக் கழட்டினான்
கிணற்றுக்குள் விழுந்தான்.

319 உள்ளே இருந்தால் ஓடித்திரிவான்
வெளியில் வந்தால் விரைவில் மடிவான்.

320 தும்மலுக்கும் தூற்றலுக்கும்
தூக்கும் கொடி மேடை.

321 வெள்ளைக்காரன் பூக்க
வெகு பேர் காத்திருக்கிறார்.

322 மாமா வீட்டுத் தோட்டத்திலே
மதயானை இறந்து கிடக்கு.

323 ஓடுகிற ஓட்டத்திலே
தீவட்டியைப் போட்டுவிட்டு ஓடுகிறான்.

324 வெளுக்காத போர்வை வெள்ளைப் போர்வை
நிர்ப்பாத குடம் நிறைந்த குடம்.

325 அரிசி பணத்துக்கு ஒரு படி
ஆக்கித் தின்ன ஆள் இல்லை.

326 ஒரு சாண் குதிரைக்கு
உடம்பெல்லாம் பல்.

327 மத்தாப்பு எரியுது
பட்டாசு வெடிக்குது.

328 பற்கள் பல உண்டு
கடிக்க மட்டும் தெரியாது.

329 கண்ணில்லாத நான்
குருடருக்கு வழி காட்டுகிறேன்.

330 முகம் இருக்கிறது; கைகள் இருக்கிறது
கால்கள் இல்லை; நடக்கிறேன்.

331 சலசல என்று சத்தம் போடும்
பேச மட்டும் வராது.

332 தொட்டித் தண்ணீரில் எட்டுக் கப்பல்கள்
கிட்டப்போனால் எட்டி ஓடுது.

333 குளத்து நிறைய இருக்கும் தண்ணீர்
குருவி குடிக்க முடியாத் தண்ணீர்.

334 வெள்ளையாம் வெள்ளைக் குடம்
விழுந்தால் ஓட்டைக்-குடம்.

335 மாலுமிக்கு வழிக் கருவி
மாதருக்குத் தொழில் கருவி.

336 பிறக்கும்போது வால் உண்டு
இறக்கும்போது வால் இல்லை.

337 கை இல்லாமல் நீந்துவான்
கால் இல்லாமல் ஓடுவான்.

338 பெட்டியைத் திறந்தால்
வருகிறான் போலீஸ்காரன்.

339 எங்கக்கா கொள்ளியக்கா
எதை வைத்தாலும் தாங்குமக்கா.

340 மாவில் பழுத்த பழம்
மக்கள் விரும்பும் பழம்.

341 ஒரு கட்டுத்துறையில்
முப்பத்திரண்டு வெள்ளைப் பசுக்கள்.

342 ஒரு பக்கம் செய்தி
ஊர் எங்கும் கியாதி.

343 கிட்ட இருக்குது பட்டணம்
எட்டிப் பார்க்க முடியவில்லை.

344 செவலை மாட்டைப் பிடிக்கப் போனால்
கொக்கி மாடு குத்தவருது.

345 மூன்று கொம்பு மாடு
ஒரு கொம்பால் முட்டுது.

346 பரட்டைத் தலை மாமிக்குப்
பவளம் போல மருமகள்.

347 பாட்டுப்பாடி வருவார்; பரதேசி அல்ல
பட்டென்று அடித்தால் சாவார்; பாம்பு அல்ல.

348 உச்சியில் பச்சைத் தோகை
உள்ளங்காலில் ரோமம்.

349 இலை இல்லாத மரம்
கலகல என்று ஆடுது.

350 ஒற்றைக்கால் கோழிக்கு
வயிறு நிறைய முட்டை.

351 கால் ஆறு இறகு இரண்டு
கடுகுபோலக் கண் இரண்டு.

352 அடிமேல் அடி வாங்கி
அனைவரையும் சொக்க வைப்பான்.

353 மஞ்சள் சட்டை மாப்பிள்ளை
மணமணக்கிறார் வீட்டிலே.

354 வெள்ளை மாளிகைக்கு
வாசலும் இல்லை வழியும் இல்லை.

355 மஞ்சள் உறைக்குள் மறைந்து இருப்பான்
மக்கள் இதயத்தில் மலர்ந்து இருப்பான்.

356 இந்தப் பிள்ளை பெரியவனானால்
படிக்காமலேயே பலன் தருவான்.

357 கன்னங் கருப்பழகி கட்டாணி முத்தழகி
வரிசைப் பல்லழகி வந்திருப்பாள் கடையிலே.

358 அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு
அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி.

359 கணவன் இல்லாத வெள்ளிப் பெண்ணுக்கு
ஏழு எட்டு பத்துப் பிள்ளைகள்.

360 குள்ள அக்காள் குள்ள அக்காள்
கூடை கந்தை கட்டி இருப்பாள்.

361 மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல
பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல.

362 மரம் ஏறும் மங்காயிக்கு
முதுகிலே மூன்று சூடு.

363 அதோ போகிறான் சிறுவன்
அவன் காலடி தெரியவில்லை.

364 வெட்கங் கெட்ட புளியமரம்
வெட்ட வெட்ட வளருது.

365 கருப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்.

366 யானை படுக்க நிழல் உண்டு
கடுகு மடிக்க இலை இல்லை.

367 பிளந்த நாக்கு; பாம்பு அல்ல
பேசாமல் பேசுவான்; ஞானி அல்ல.

368 கால் இல்லாத மான்
வேர் இல்லாத புல்லைத் தின்னும்.

369 ஏரி வடிய வடிய
எருமை மாடு உப்புது.

370 அழுத்தி மிதித்தால்
அலறிக்கொண்டு ஓடும்.

371 கண் சிமிட்டி, மணி அடித்து
கண்ணீர் வடிப்பார்கள்.

372 பாறைக்குள்ளே கோரை
கோரைக்குள்ளே குறவன்.

373 ஊசி நுழையாக் காட்டினிலே
ராசா பல்லக்கு.

374 நீந்துவதற்கும் தொங்குவதற்கும்
ஒரே நாளில் திருமணம்.

375 பட்ட மரத்தைத் தட்டினுல்
படைகள் வரும்.

376 பகலில் துயிலுவான்
இரவில் அலறுவான்.

377 வாலினுல் நீர் குடிக்கும்
வாயால் பூச்சொரியும்.

378 கைக்குள் அடங்குவான்
கண்ணைச் சிமிட்டுவான்.

379 நெற்றியில் கோல் பட்டு
கதறுதாம் காளை.

380 சின்னச் சின்னச் சாத்தான்
வயிறு பெருத்துச் செத்தான்.

381 அங்கமுத்து வாசலிலே
தங்கமுத்து காயுது.

382 சங்கரன் கோவில் டப்பா
தாயும் மகளும் தேய்ப்பா.

383 வானத்திலே பறந்திடுவான், பறவை அல்ல;
வட்டமிட்டுச் சுற்றிடுவான், விமானம் அல்ல.

384 குண்டோதரன் வாயில் குள்ளன் நுழைந்தால்
குபேர பட்டினத்திற்கு வழி தெரியும்.

385 மாற்றுக் கதைபோட்ட மன்னவன் தம்பியை
சேற்றுக்குள் பிடித்து செதுக்கென்று
அமுக்கிஞர்கள்.

386 ஊருக்கு நாட்டாண்மைக்காரன்
சாப்பிட்டால் இலே எடுக்கமாட்டான்.

387 சுட்ட பிணத்தைச் சுட
செத்த பிணம் வந்திருக்கிறது.

388 ஆசாரி பண்ணிய அவமானத்திற்கு
ராசாதி ராசனெல்லாம் தலே குனிகிருர்கள்.

389 சிங்கார மண்டபத்தில் சங்கீதக் கச்சேரி
அங்கே போனல் அடியும் உதையும் தப்பாது.

390 எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து
வட்டக்குடை பிடித்து வருகிருர் துரைமகன்.

391 ஒருபடி ஓலே திருவடிராசன்
காசிக்குப் போனலும் வாசிக்க முடியாது.

392 முத்தும் முத்தும் குதித்து விளேயாட
மங்கள ராஜா மகிழ்ந்து விளேயாட

393 எல்லாச் சட்டியும் மூடி இருக்க
ஊறுகாய்ச் சட்டி திறந்து கிடக்கு.

394 ராசாமகள் ரோசக்காரி
பூ இல்லாமல் சடைபோட மாட்டாள்.

395 பார்க்கப் பச்சை பழுத்தால் சிவப்பு
பல்லிலே பட்டால் கண்ணிலே நீர்.

396 உடைந்த வெள்ளிக்கு
ஒக்குட ஆசாரி இல்லே.

397 ஆற்றிலே பத்து மரம்
அசையுது, பிடுங்க முடியவில்லை.

398 கல்லும் கரடும், முள்ளும் முரடும்
வேரும் விறகும் — என்ன?

399 அடி சிவப்பு, நடு பச்சை
உச்சி வெள்ளை உரைப்பீர் இதனை.

400 தொப்பையனுக்கு ஒரு வாசல்
தோழனுக்கு இரண்டு வாசல்.

401 தாய் தரையில் கிடக்கிறாள்
மகள் மகாராசா முடியில் இருக்கிறாள்.

402 சிகப்பு மொச்சைக் கொட்டை
பகட்டும் பட்டுச் சட்டை.

403 ஓகோ மரத்திலே உச்சாணிக் கொம்பிலே
நன்னீர் வச்சிருக்கு நாறபது செம்பிலே.

404 அந்தாப் போகுது இந்தாப் போகுது
அடியைப் பார்த்தால் தெரியவில்லை.

405 ஏழு கறியும் சோறும் ஆக்கியிருக்கு
இலை எடுத்து விட்டு உண்ணவேண்டும்.

406 ஊரெல்லாம் மூடி இருக்கும்
ஊறுகாய்ப் பானை திறந்திருக்கும்.

407 அந்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்கும்
டொய் டொய் சத்தம் கேட்கிறது.

408 ஓடுவான் சாடுவான்
ஒற்றைக் காலில் நிற்பான்.

409 விஞு வெளிவருவதேன்
வைக்கோல் போர் போடுவதேன்.

410 ஊசிபோல் இலே இருக்கும்
உருத்திராக்கம் போல் காய் காய்க்கும்.

411 குளிச்சுக் குளிச்சுக் குத்தவைக்கும்
கோமாளிப்பயல் பிள்ளே.

412 கோணல் எத்தனே இருந்தாலும்
குணமும் குறியும் மாருது.

413 காதவழி போனுலும்
கைகடுக்காச் சுமை என்ன சுமை?

414 ஆலிலே உதிர்வதேன்
இராவழி நடப்பதேன்?

415 அச்சு வண்டி ஓடுவதேன்
அக்காள் புருஷன் மச்சானுவதேன்?

416 எருக்கம் இலே பழுப்பதேன்
எருமைக் கன்று சாவதேன்?

417 வெளியே வெள்ளிக்கட்டி
உள்ளே தங்கக் கட்டி.

418 கிளிகள் மூன்று நிறம்
கூட்டுக்குள்ளே போனுல் ஒரே நிறம்.

419 மாமரத்திலே அடித்த மாங்காய்
மாத்தூரிலே போய் விழுகிறது.

420 நீராலே பிறந்து நீராலே அழியும்
நித்தனித்தம் சுகம் தரும்பொருளது.

421 வராவிடில் என்னை வாவென்று அழையார்
வந்தால் எவரும் போவென்று உரையார்

422 ஈனுது புரளாது இழுத்துக் கட்டினுல்
குடத்தளவு பாலைக் கொடுத்துதவி நிற்கும்.

423 இராவணன் சிரசற்றதேன்?
இராவெள்ளி மறைவதேன்?

424 அரைக்காசு அஞ்சுகம்
ஐந்து காசுக்கு மஞ்சள் குளிக்கிருள்.

425 கற்றவர் மனத்தை மயக்கிடும் கலைமகள்
விற்றவர் பணத்தைப் பெருக்கிடும் மலைமகள்.

426 பற்கள் தெரிவதேன்?
பொற்கொல்லன் தட்டுவதேன்?

427 பட்ட மரத்திலே
பம்பரம் சுற்றுகிறது.

428 நோய் நொடியில்லாமல்
முக்கி முனங்கித் திரிகிருன் ஒருவன்.

429 உத்தியோக சத்தியோகமில்லாமல்
ஊரைச்சுற்றி ஓடியோடித் திரிகிருன் ஒருவன்.

430 ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊஞ்சலாடுது.

431 காசியிலிருந்து கல்கத்தா வரையில்
அசையாமல் போகிறது என்ன?

432 கொட்டத்துப் பானையைக் கோமகனுலும்
எடுக்க முடியாது எடுப்பிக்க முடியாது?

433 மூலை முடுக்கிலே முந்நூறு தென்னம்பிள்ளை
காயாது பூவாது கள்ளருக்கும் எட்டாது.

434 பார்த்தால் பார்க்கும்; சிரித்தால் சிரிக்கும்
குத்திப் பார்த்தால் பத்துச் சில்லாம்.

435 மறைந்திருக்கும் மாயப்பிசாசு
எங்கு போனாலும் அங்கெல்லாம் வரும்.

436 போவான் வருவான் திம்மப்பன்
ஒருகாலால் நிற்பான் திம்மப்பன்.

437 மொட்டை மாடு உட்கார்ந்திருக்கிறது
மூக்கணாங்கயிறு மேய்ந்து வருகிறது.

438 இரவெல்லாம் பூங்காடு
பகலெல்லாம் வெறுங்காடு.

439 பச்சைச் சன்னல் வெள்ளைத் தோப்பரா
கருப்புப் பாதிரி உள்ளே தூங்குகிறான்.

440 சுவரில் பொம்மை சங்கிலிப் பொம்மை
வந்து போவார்க்கு வார்க்கும் பொம்மை.

441 கருத்த கட்டிலின்மீதே காரிகையாம்
விரிக்கும் விரிப்பாம் எடுக்கும் விரிப்பாம்.

442 மேற்பலகை கீழ்ப்பலகை
பலகை நடுவில் நெளிப்பாம்பு.

443 டாக்கு டீக்கு என்னுமாம் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை.

444 ஒளியும் இருளும் ஒத்து வாழ்வன
வெளிநிகர் இடையாய் விளம்பாய் இதுவென்?

445 பூவும் பூக்கும் காயும் காய்க்கும்
பூவையிருக்கப் பூங்கொம்பில்லே.

446 தவளமேனியன் பவள நாசியன்
நெடிலாய்ப் பிறந்து குறிலாய் வளர்வன்.

447 புட்டுக்கூடை போலப் பூ பூக்கும்
பறிக்கப்போனல் எட்டாது.

448 ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே
பச்சைப்பாம்பு தொங்குகிறது.

449 சிறு சிறு கதவுகள் செய்யாக் கதவுகள்
திறக்க அடைக்கச் சத்தம் செய்யா.

450 இவ்வளவூண்டு சிற்ருண்டி
வயிற்றை பிதுக்கிக்கினு செத்தாண்டி.

451 மூக்குத்தி போலப் பூ பூக்கும்
அப்பாட என்ற காய் காய்க்கும்.

452 மேனி முற்றும்கண் மேயவன்
தனிற் சிக்கிய சீவனே மாய்ப்பவன்.

453 நீட்டிக்கொண்டு நடுவே படுக்கும்
சுருட்டிக்கொண்டு மூலேயில் நிற்கும்.

454 நிரப்பலாம், பிடிக்க முடியாது
உணரலாம், காண முடியாது.

455 அந்தரான காட்டிலே
நாலுபேர் நனேயாமல் நிற்கின்ருர்.

456 கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டு
முத்துப் பிள்ளேகள் பெற்று மகிழ்ந்தாள்.

457 மூன்று பெண்கள் முட்டாக்குக்காரிகள்
வெய்யில் காய்ந்தால் வெவ்வேறே போவார்கள்.

458 மந்திர மெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே
மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே.

459 குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை.

460 முதன் முதல் கற்ற பொருள்
முடிவிலும் அறியாப் பொருள்.

461 சித்திரப் பின்னல் கோட்டைக்குள்ளே
போக வழியுண்டு திரும்ப வழியில்லை.

462 நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி
வாயிலே தவழ்ந்து வானத்திலே போகிறவர்.

463 காட்டுக்குள்ளே நெல் விரித்திருக்கிறது
காக்காயும் தின்னவில்லை குருவியும்தின்னவில்லை.

464 மஞ்சள் பெட்டி மரக்கால் பெட்டி
ஒருக்காலும் திறக்காப் பெட்டி.

465 மதுரைச் சமுக்காளம் மடிக்க முடியவில்லை
கடல் புளியங்கொட்டை கடிக்க முடியவில்லை.

466 ஓடோடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி.

467 வெள்ளை வயலில் கருப்பு விதை பாவி இருக்கிறது
கண்ணால் பார்த்தேன் கையால் எடுக்கமுடிய
வில்லை.

468 வட்டமான குளத்திலே மீனுய் மிதக்குதய்யா
ஈட்டியாலே குத்தி எடுத்துப்போடு வாயிலே.

469 மூன்றுகால் யானை
தின்பதெல்லாம் கரும்பு.

470 காலைகட்டிக் கிடக்குது
கயிறு ஓடிக் கிடக்குது.

471 ஓடும் குதிரை ஓடியாடும் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்கும் குதிரை.

472 இருண்டதோர் காட்டில் மிரண்டது பன்றிகள்
பத்துபேர் கூடி இரண்டு பேர் குத்தினர்.

473 ஓட்டைப் பிள்ளையார் கோவிலிலே
அம்மாயி விழுந்து விழுந்து கும்பிடுகிருள்.

474 பையில் அது இருந்தால்
வேறு எதுவும் அங்கிருக்காது.

475 எங்காத்துக் கொல்லையிலே
மொட்டையாண்டி எட்டி எட்டிப் பார்க்கிருன்.

476 சள்சளங்குமாம் சண்டைக்குப் போகுமாம்
வந்து கிடக்குமாம் பொந்துக் குள்ளே.

477 அண்ணன் கிணற்றில் தம்பி இறங்கலாம்
தம்பி கிணற்றில் அண்ணன் இறங்க முடியாது.

478 கையுண்டு தலையில்லை
நெஞ்சுண்டு மூச்சில்லை.

479 வெள்ளைப் பிள்ளையார் கோவிலில்
விழுந்து கும்பிட இடமில்லை.

480 எங்க அம்மான் ஆத்துக் கொல்லையிலே
பச்சைத் துலுக்கன் பாய்போட்டுப்
படுத்திருக்கான்.

481 கொம்புக் காளை இறங்கி வருது
பிடிக்கப்போனால் கொம்பைக் காணோம்.

482 நாலுமூலைச் சதுரப் பெட்டி
அதன்மேல் ஓடும் குதிரைக் குட்டி.

483 நாட்டாண்மைக்காரன் பெண்சாதியை
ஓட்டிலே போட்டு மூடியிருக்கு.

484 மண்ணுக்குள்ளே இருக்கிற மாயாண்டி
உரிக்க உரிக்கத் தோலாண்டி.

485 இவ்வளவூண்டு ராமனுக்கு
அவ்வளவூண்டு நாமம்.

486 உனக்கும் எனக்கும் தெரியாமல்
குண்டுக்குள்ளே தண்ணீர் இருக்குது.

487 ஆடி அசைந்து வர அடியில் சிந்தி வர
கூடிய பெண்கள் கூந்தலை ஆட்டிவர.

488 கொல்லையிலே சோறு பொங்கி வைத்தேன்
காக்காய் தின்னவில்லை, கழுகும் தின்னவில்லை.

489 உடலுண்டு உயிரில்லை
ஓடி ஓடிப் போய்ச் சேர்ந்தான் ஊருக்கு.

490 இத்துனூண்டு சிட்டுக் குருவிக்கு
எட்டுச் சுத்துப் பாவாடை.

491 இட்டேன் எடுக்க முடியவில்லை
பூசினேன் புட முடியவில்லை.

492 குட்டைக் குட்டைச் சீமாட்டி
குளித்துக் குளித்துக் கரையேறுகிறாள்.

463 ஓ ஓ மரமே உயர்ந்த மரமே
ஒருபிடி தழைக்கு விதியற்ற மரமே.

494 காடெல்லாம் சுற்றிவரும் கண்டலப் பசு
கண்ட தண்ணீர் குடியாத வெண்டலப் பசு.

495 ஆள் இறங்காத கிணற்றுக்குள்
மரம் இறங்கிக் கூத்தடிக்குது.

496 இத்துனூண்டு சிட்டுக்குருவி
இழுத்து இழுத்து முள் அடைக்கிறது.

497 சித்தெறும்பு முட்டையிடும் சிவலோகந் தண்டி
அது போட்ட அலங்காரம் அழகுமலைத் தண்டி.

498 ஓடுவான் சாடுவான்
ஒரு இடத்தில் நிற்க மாட்டான்.

499 இத்துனூண்டு தண்ணீரிலே
சித்திரைப் பூ பூத்திருக்கு.

500 அம்மா படுத்திருப்பாள்
மகள் ஓடிக்கொண்டிருப்பாள்.

501 செக்கச் சிவந்த நிறம்
தேங்காய் திருவி அறம்.

502 மூட்டையை அவிழ்க்க அவிழ்க்க
முடிச்சாக வருகிறது.

503 மாரி இல்லாமல் ஆமை கெட்டது.
ஆமை இல்லாமல் சீமை கெட்டது.

504 பட்ட மரத்தில் பச்சை
அதிலும் சிவப்பு

505 கட்டைக் காளை குட்டைக் கொம்பு
கிட்டப்போனால் முட்ட வருகிறது.

506 ஏரித்தண்ணீர் வற்ற வற்ற
எருமைக்கடா உப்ப உப்ப.

507 அரைப்பணத்துக்குப் பெண்டாட்டி கட்டி
அடிக்கப் போனால் சிரிக்க வருகிறாள்.

508 வாரிவிட்டேன் கொட்டிவிட்டேன்
ஊரெல்லாம் புகைகிறது.

509 இண்டம் புதரிலே இடிவிழுந்த இடத்திலே
நான் வைத்த பணியாரம் நையவே இல்லை.

510 ஆத்தாள் பிள்ளைத்தாச்சி
அப்பன் ஊர் சுற்றி.

511 காட்டிலே ஒரு தூக்கு வெல்லம் வைத்தேன்
ஈயும் தொடவில்லை எறும்பும் தொடவில்லை.

512 ஊருக்கு நாட்டாண்மைக்காரர்
சாப்பிட்டால் இலை எடுக்கமாட்டார்.

513 மலைமேல் இருக்கும் மங்கைக்கு,
ஈரும் இல்லை; பேனும் இல்லை;
எடுத்துக் குத்த ஆளும் இல்லை.

514 அழகான நெட்டை ராசாவுக்கு
ஆயிரம் அடி அடித்தாலும்
வலிக்கவே வலிக்காது.

515 கோட்டையிலே மணலைக் கொட்டி
குடம்பால் தனியே கறந்தால்
மிஞ்சுவது கருப்பாத்தான்.

516 எஸ் எஸ் கன்றுக்குட்டி
இங்கிலீஷ் கன்றுக்குட்டி
தண்ணீர் பட்டால் செத்துப்போகும்.

517 பச்சைக்காய் முக்கொடப்பி பனங்காயுமல்ல
உடைந்தால் மூடிஇரண்டு தேங்காயுமல்ல
உருக்கினல் நெய்வடியும் வெண்ணெயுமல்ல.

518 நாலுகால் மன்னு நாளை சாவாய்
யாருடா சொன்னு சென்னியிலே கண்ணு
குடல்இல்லா மன்னன் கூப்பிட்டுச்சொன்னுன்.

519 எட்டாத தேசத்தில் ஒரு முட்டாள்
கழுதை வேலி காவல் இருக்க
வெள்ளாமையைத் தின்று விட்டுப் போகிருன்.

520 ஓங்கி வளர்ந்து ஒரு பிள்ளை பெற்று
தொப்பென்று விழுந்தாள்
விதியே என்று செத்தாள்.

521 சுற்றிச் சுற்றி வேலி நட்டு
சூரியனுர் பட்டு உடுத்தி
ஐயோ அவள் கையேந்தி நிற்கிருள்.

522 முப்பதுக்குமேல் மந்திரிகள் இருந்தும்
முதல்வனை ராசாவால்தான்
எதையும் அறிய முடியும்.

523 தத்தா பித்தா நான்கு கால்
தானுக முளைத்தது இரண்டு கால்
முத்தின மரத்துக்கு மூன்று கால்.

524 உயர்ந்த மரத்திலே உச்சாணிக் கிளையிலே
மூணு கண்ணுப் பாப்பாத்தி
முக்காடு போட்டிருக்கா.

525 அரக்குப் பட்டு அழகான பட்டு
கண்டவர் கண்பட்டு
கலுங்குதையா சின்னப்பட்டு.

526 நீண்ட உடலிருக்கும் தூணுமல்ல
உடலில் சட்டையிருக்கும் உயிரில்லை
துயிலுக்கோ சுகமிருக்கும் மெத்தையல்ல.

527 மரத்திலே மரம் முளைத்து
மக்க சக்கரப் பழம் பழுத்து
எடுப்பார் உண்டு, தின்பார் இல்லை.

528 உயர்ந்த திண்ணை ஏறி
கனிந்த பழம் தின்னும், பெண்ணே!
சோற்றைக் கறி தின்கிறது.

529 அனல்மேல் கருப்புக் குதிரை
அதன்மேல் வெள்ளையன்
ஏறி ஏறிக் குதிக்கிறான்.

530 போய் வருபவை இரண்டு
போனால் வராதவை இரண்டு
எப்போதும் இருப்பவை இரண்டு.

531 பல் இல்லாத வெள்ளையன்
காட்டிலேயும் மேட்டிலேயும்
வாய்விட்டுச் சிரிக்கிறான்.

532 கானா தேசத்துக் கன்னிகள் நாங்கள்
சீனா தேசத்துச் சிங்காரிகள் நாங்கள்
சீக்கிரம் வந்து கதவைத் திறப்போம்.

533 பச்சைப் பங்களாவிலே
வெண்பட்டு மெத்தையிலே
கருப்புத் துரை தூங்குகிறார்.

534 அரியலூர்த் தாதி அதிக பிள்ளைக்காரி
பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில்
பலே கைகாரி.

535 யானைக்கும் குதிரைக்கும் அடங்காத தண்ணீர்
தொண்டைமான் குதிரைக்குத்
தொடையளவு தண்ணீர்.

536 பூசரை வீசரை மரத்தின்மேல் ஏறி நடப்பவரே
கை போட்டுக் கறக்காத பால்
இரண்டுபால் கொண்டு வா.

537 இருப்பது இரண்டு கால்
ஓடுவது குதிரை வேகம்
இறக்கை உண்டு; பறக்காது.

538 வா என்று கூப்பிடும்
போ என்று சொல்லும்
ஆனால் பேசாது.

539 அநேக கொடி இருக்கும்
அழகான பூவும் இருக்கும்
ஆனால் செடி அல்ல.

540 பதுங்கி வருவார் கள்வர் அல்ல
பாய்ந்து பிடிப்பார் திருடனை அல்ல
வீட்டிலே இருப்பார் கணவர் அல்ல.

541 ஓடிப் படர்வேன் கொடி அல்ல
ஒளி மிக உண்டு நிலவு அல்ல
மனைகளை அலங்கரிப்பேன் மலர் அல்ல.

542 கால் பத்து, கண் ஆறு
வால் இரண்டு, தலை மூன்று
கை இரண்டு, கொம்பு நான்கு.

543 டில்லி ராஜா மகள்
அவள் வயிற்றில் ஆறு மாதப் பிள்ளை
அவள் ஒருவரோடும் பேசுவதில்லை.

544 செட்டியார் கடையில் இருப்பேன்
சேர்ந்து நான் வசிப்பேன்
ஆட்கள் வந்தால் பறப்பேன்.

545 காற்றிலே பறக்கும், காற்றுடி அல்ல
சக்கரம் உண்டு, சைக்கிள் அல்ல
வர்ணங்கள் உண்டு, படம் அல்ல.

546 ஆட்டமும் பாட்டமும் அதனாலே
தேட்டமும் ஊட்டமும் அதனாலே
கூட்டமும் நாட்டமும் அதனாலே.

547 வாய் இல்லை வார்த்தைகள் சொல்வேன்
உயிர் இல்லை ஊருக்குப் போவேன்
கால் இல்லை வீட்டுக்கு வருவேன்.

548 தாய் இனிப்பாள்
மகள் புளிப்பாள்
பேத்தி மணப்பாள்.

549 வேலைக்காரி கெட்டிக்காரி
வெளியே தலைகாட்டாள்
உடன் பிறந்த சொந்தக்காரி.

550 ஏறினால் வழுக்கும் மரம்
இனிய கனியைக் கொடுக்கும் மரம்
எங்கும் இருக்கும் மரம்

551 பொழுது விடிந்தால் நல்லது என்றது ஒன்று
பொழுது விடியவேண்டாம் என்றது ஒன்று
விடிந்தால் என்ன, விடியாவிட்டால் என்ன
என்றது இன்னொன்று.

552 ஆத்தி மரத்தடியில்
கல்லுக்கும் முள்ளுக்கும்
வேலி அடைக்கிறான் ஒருவன்.

553 பட்டணத்திலே யிருந்து
இரண்டு சிராய் கொண்டு வந்தேன்
ஒன்று எரியுது, ஒன்று புகையுது.

554 பெட்டியாவது பெட்டி பேசுகின்ற பெட்டி
தட்டிருக்கும் பெட்டி வாயிருக்கும் பெட்டி
விசை கொடுத்தால் பாடும் பெட்டி.

555 சூரியன் காணுத கங்கை
சுண்ணம் தோற்கும் வெள்ளை
மண்ணிற் பண்ணுத பாண்டம்.

556 பூவை பூ எடுத்து
பூ மீது வைத்துத் தின்று
பூ போக மீதி பூ இருக்கு.

557 புகையாய்ப் போக்காளி
பலருக்குக் கூட்டாளி
பையில் இருப்பாளி.

558 விதையில்லாத செடி
மழையில் பிறந்து
வெய்யிலில் காயுது.

559 உச்சிக் கிளையிலே
ஒரு முழக் குச்சி
ஊசல் ஆடுதே.

560 காய்க்கும் பூக்கும்
கலகலக்கும், ஆனல்
காக்காய் உட்கார இடமில்லை.

561 எதிர்க்கதை போட்டால்
ஏகாலிப் பயலுக்கு
முதுகில் மூன்று சுழி.

562 பிள்ளை பிறந்தது
பிறந்தவுடன் எழுந்தது
நான்கு பேரைக் கடித்தது.

563 நாலு காலுண்டு வீச வாலில்லை
நாட்டாண்மைக்காரன் பெண்டாட்டியை
ஓட்டால் மூடி வைத்திருக்கிறது.

564 ஒரு பானை சோறு வடித்து
ஓராயிரம் பேருக்குப் போட்டு
இன்னும் சோறு இருக்குது.

565 உதிர்ந்தால் ஓடிடுவான்
காற்றடித்தால் பறந்திடுவான்
வெய்யில் பட்டால் உலர்ந்திடுவான்.

566 பானை சிவப்பு
அதன் மூடி கறுப்பு
உள்ளே தினைச்சாதம்.

567 தாய் இட்டது முட்டை
சூரியன் பொரித்தது குஞ்சு
தாய் போனால் முட்டை கூழ் முட்டை.

568 சின்னச் சின்னக் கத்தி
சிங்காரக் கத்தி
துரைமாரைக் கண்டாலும் விலகாத கத்தி.

569 காயும் காய்க்கும்
பூவும் பூக்கும்
காசுக்கொரு இலையில்லை.

570 மலையிலிருந்து இரண்டு பசு பிடித்துவந்தேன்
ஒன்று பாலாய்க் கறக்கிறது
ஒன்று ரத்தமாய்க் கறக்கிறது.

571 அடியில் சிவப்பு
நடுவில் பச்சை
உச்சியில் வெள்ளை.

572 அடி மத்தளம், இலை பர்வதம்
குலை சிறிது, காய் துவரு
பழம் தித்திப்பு.

573 ஐவருடனே பிறந்தான் தருமன் அல்ல
அதில் ஒருவன் சாட்சி சொல்வான்
தன் சுவையைத் தான் சுவைப்பான் ஞானியல்ல.

574 பாத்தி சிறு பாத்தி
பாய்வது கருநீர்
பூப்பது செம்பூ.

575 நீரோடி நிலம் பாய்ந்து
காரோடி மணலிலே
கதுவாலி முட்டையிட்டு இருக்கிறது.

576 கண்டவர் கண்ணைக் கவர்வாள், கலாவல்லி
எடுத்தவர் இதயத்தைக் கவர்வாள் இசைவல்லி
கற்றவர் கருத்தைக் கவர்வாள் கனகவல்லி.

577 சிலு சிலுங்கிறது ஒரு குருவி
சிந்திப் பாயுது ஒரு குருவி
மக்கட்டுக் கட்டுது ஒரு குருவி.

578 மேலேயும் கல் கட்டிடம்
கீழேயும் கல் கட்டிடம்
நடுவிலே போகிறது ஊற்றுக் கால்வாய்.

579 முட்டையிடும்; மூன்றுமாதம் அடையில்இருக்கும்,
நாக்கை நீட்டும்; வெளியே வரும்,
நாகம்போல் படமெடுக்கும்; நாகமில்லை.

580 பட்டணத்துச் சேலையை மடிக்க முடியல்லே
அதிலுள்ள ரோசாப்பூவை பறிக்க முடியல்லே
ராசாத்தி துரைமகளைப் பிடிக்க முடியல்லே.

581 நெடு நெடுவென்று வளர்ந்த மரம்
லீலீப்பூ பூத்த மரம்
வாயில் வார்த்த மரம்.

582 வாய்க்கால் வெட்டி வரப்பு வெட்டி
வைகாசி மாதம் தோப்பு வெட்டி
ஆத்தாள் தெருவிலே மகள் கொலுவிலே.

583 இவ்வளவூண்டு இருப்பாண்டி
வாய்க்கு ருசியாய் இருப்பாண்டி
வயிறு கிழிந்து செத்தாண்டி.

584 இருளன் கொண்டது இரண்டெருது
படுத்திருக்கும் பாரினில் ஒன்று
அதனை அடுத்து மற்றது திரியும்.

585 கையில்லாதான் கடித மெழுதினன்
பார்வை யில்லான் படித்துப் பார்த்தான்
செவியில்லாதான் செவ்வையாய்க் கேட்டான்.

586 குயவன் செய்யாக் குடமாம்
வண்ணான் வெளுக்கா மடியாம்
ஞாயிறு பாரா நீராம்.

587 வட்ட வட்டச் சிங்கண்ணா
வாலில்லாத சிங்கண்ணா
என்னை வந்து எழுப்பண்ணா.

588 எங்கள் தம்பி குள்ளத்தம்பி
பந்தடிப்பான் பயிரடிப்பான்
நூறு பேரை நொறுங்கடிப்பான்.

589 இராசாத்தி ராசவடி பிள்ளை
அவள் பூசுறது கெந்தப்பொடி பில்லை
அவள் வயிற்றிலே ஆறு மாதம் பிள்ளை.

590 அப்பன் சொறியன்
ஆத்தாள் சடைச்சி
குழந்தைகள் சர்க்கரைக்கட்டி.

591 இதுவரையில் இல்லாதது
எப்போதும் இருப்பது
யாரும் பாராதது.

592 பாத்திகட்டித் தண்ணீர் பாய்ச்சிடுவார்
விதைகொண்டு விதைக்க மாட்டார்
விளைந்தவுடன் வெட்டிக் கொள்வார்.

593 முன்னே வெளுத்து முனையிலே நனைந்து
நடுவே சிவந்து நடக்கு மிவன்
கண்டது கண்டாற்போல காணுமல் போகிருன்.

594 வெண்மையான பூமியிலே வேகமாய் ஓடுவான்
நொன்மை யுற்ருல் நின்றிடுவான்
சென்னியைஅறுத்தாலுமேசக்திபெற்றிடுவானே

595 தவள முத்தினைப் பவளமா தீன்று
தன்னகம் வைத்துக் கண்ணிமை போலக்
காக்கக் கண்டேன், கழருய் இதுவென்?

596 நாகூர் பட்டணம்
நான்கு வாசலுக்குப் பதினாறு பெண்
அவர்களுக்கு இரண்டே ராஜா.

597 மூன்று தலை, பத்துக் கால்
இரண்டு வால், ஆறு கண்
நான்கு கொம்பு.

598 வெண்மையான காடு
கருப்பு விதைகொண்டு கையால் விதைப்பர்
வாயால் அறுப்பர்.

599 பிறக்கும்போது இரண்டு கொம்பாய்ப் பிறந்தது
இறக்கும்போது இரண்டு கொம்பாய் இறந்தது
இருக்கும்போது மறைவது.

600 ஒரு படி அரிசி போட்டு
ஊருச் சனங்களுக்குப் போட்டு
மீந்து கிடக்குது மெத்த மெத்த.

601 ஓங்கி உயர்ந்து வளரும், வாழையல்ல,
இலையுண்டு கிளையில்லை, தென்னையல்ல,
நடுவே கணுக்கள் உண்டு, மூங்கிலுமல்ல.

602 வட்ட வட்டச் சுக்கிலா
வாலில்லாச் சுக்கிலா
நெல்லைக் கண்டால் துள்ளி ஓடும்.

603 செங்கக் கட்டு செங்கக் கட்டு மகிழம்பூக்கொல்லை
செட்டியார் மகள் பெயர் தில்லை
அவள் வயிற்றில் ஆறுமாதம் பிள்ளை.

604 வண்ணான் வெளுக்காத வெள்ளை
குயவன் பண்ணாத பாண்டம்
மழை பெய்யாத தண்ணீர்.

605 மூத்த தம்பி ஆத்துக்குள்ளே
முளிமுளிச்சான் காட்டுக்குள்ளே
பேச்சுப் படிச்சான் வீட்டுக்குள்ளே.

606 செக்கச் சிகப்பி நாங்கள்
தீயில் உள்ளவர்கள் நாங்கள்
கல்தடுக்கினால் செத்துப்போவோம் நாங்கள்.

607 உச்சியிலே பூப்பூத்தவரே! உம்மைத் தின்னவாராள்
சிரமமில்லாதவரே! உமக்கு யார் சொன்னது?
நாக்கிலே ஈரப்பசை இல்லாதவர் சொன்னார்.

608 இனிமை மாறி ஏக்கம் வந்தது
குணம் மாறி குற்றம் வந்தது
காரணம் கூறினால் கல்கண்டு தருகிறேன்.

609 ஆனை ஏறாத மலையிலே
ஆடு ஏறாத மலையிலே
ஆயிரம் பூ பூத்திருக்கு.

610 அப்பன் தொந்தி வயிறன்
மகன் கருத்தாளி
பேரன் செலவாளி.

611 ஓடி ஆடித் திரியாமல்
கண்டு உண்டு மேயாமல்
நின்ற நிலையில் ஒரு குடம் பால்.

612 ஆலமரம் இரண்டு பலாமரம் இரண்டு
கிளுகிளுக்கை இரண்டு மினுமினுக்கை இரண்டு
உளுக்கன் தாடி ஒன்று ஊருக்குப் பல உண்டு.

613 டாக்டர் வந்தார்
கோட்டைக் கழட்டினர்
கேணிக்குள் குதித்தார்.

614 பச்சை பச்சென்று இருப்பாள் பாவையல்ல
இச்சையுடன் செல்வோருக்கு இதமளிப்பாள்
ஆடிப்பாடி விசிறிடுவாள் அணங்குமல்ல
தேடிப் போவோருக்குத் தெவிட்டாத உண
வ்ளிப்பாள்.

615 பட்சியில் சிறந்த பட்சி பல வர்ணமுள்ள பட்சி
சிறகை விரித்தாடும் பட்சி சிங்காரப் பட்சி
ஆயிரம் கண்ணுள்ள பட்சி அற்புதப் பட்சி
நாட்டியம்ஆடும்பட்சி நானிலத்தில் வாழும்பட்சி.

616 கால் இரண்டுண்டு நடக்க வகையறியாள்
கண்ணு முண்டு மேலே சிமிட்ட வகையறியாள்
பால் குடிக்க வகையறியாள் பாக்கும் தின்பாள்
ஆளை அறிந்து சொன்னவர்க்கு ஆயிரப்பொன்.

617 உடல் எல்லாம் ரோமம் உண்டு
வால் அடர்ந்திருக்கும் கீரியல்ல
மரமேறிக் கிளை தாவும் குரங்குமல்ல
உடம்பிலே வரிகள் உண்டு புலியல்ல.

618 கூத்தனூர்க் குளத்திலே
குமரிப் பெண்கள் குளிக்கிறார்கள்
பார்த்த கண்ணு பூத்துப் போச்சு
பையன் கையில் காசு இல்லை.

619 வெள்ளோடு ஓட, மான்
மேயக் கண்டாயா மந்திரி?
இரு கொம்புடன் மேயுதே
அதுதானே ராசா!

620 வானத்திலே பறக்கும்
வால் நீண்ட பறவைக்கு
தரையில் இருக்கும் தம்பி கையிலே
இருக்கும் நீண்ட கடிவாளம்.

621 கடுகு மிளகு சீரகம்
கார்குறிச்சி வெங்காயம்
இளைய கொழுந்தன் இல்லாமல்
என்ன கறி வைக்கட்டும்.

622 கோரை ஆத்தா மகள் கொண்டைக்காரி
கொண்டைமேல் பூச்சூடி ஆடக் கண்டேன்
பார்த்தாலும் அவள்மேனி பச்சை மேனி
வகுத்தாலும் அவள் வயிறு பாலுபோல.

623 பட்டை மரத்தில் கொக்கிருக்க
பாவைகள் இரண்டு ஆடிவர
ஈனுப்பூச்சி இறங்கிவர
எறும்பு இடாத முட்டை கரைந்துவர.

624 பேரென்றால் பெண்ணின் பேரு
பெண்ணுக்கோ ரூபமில்லை.
ஓடுவாள் வேகமாக உதவுவாள் யாருக்குமே
போனவள் திரும்ப மாட்டாள், புகல்வீர் அதை.

625 முன்னுள்ள பொருளை அப்படியே காட்டும்
முகத்திற்கு முகம் முத்தமிடும்
பளபளப்பு என்றாலே பாதி தெரியும்
பெல்ஜியம் என்றாலே பெயர் தெரியும்.

626 விரித்த தலை முடியாத
விவரங் கெட்ட பெண்ணே!
நீ பெற்ற பிள்ளைக்கு
வகையாலே ஒரு பெயர்.

627 சித்தூர் சிறு மணலிலே
காய்க்கும் கத்தரிக்காய்
கூட்டிப் பார்த்தால்
கொப்புக்கு முப்பது காய்.

628 கார்ராண் கரு மணலில்
கருத்த வாழை குருத்துவிட்டு
சிம்புவிட்டு சினுக்கு விட்டு
காக்காய் ஏறக் கொப்பில்லை.

629 கல்லுக் குத்திச் சோறாக்கி
கைபோட்டுக் குழம்பு வைத்து
மரைபோட்டு விருந்தாம்
மாப்பிள்ளை அவருக்கு.

630 சலசலா என்று வருகிறவரே!
நானோ சாகாமல் சாகிறேன்
நீ வந்தால் மாண்டு போவாய்
உடையவன் காத்திருக்கிறான்.

631 மூன்றெழுத்து உண்டானல்
அமைந்ததொரு வெண் பொருள்
தலையும் கடையும் சேர்ந்தால்
தரணிவாழ் மிருகம் ஒன்று.

632 நல்ல பாம்பு படம் மூன்று
நற்கதலிப் பழம் நான்கு
பச்சைப் பாம்பு ஐந்து
இத்தனைக்கும் காம்பு ஒன்று.

633 மடக்காமல் பறக்குதே
அது என்ன மந்திரி?
சிமிட்டாமல் விழிக்குதே
அதுதான் அரசே!

634 வீட்டுக்குள்ளே இருப்பாள்
விந்தையாகப் பேசுவாள்
வந்தவரை வா என்பாள்
வாசல் தாண்ட மாட்டாள்.

635 திருச்செந்தூர்ப் பெண்ணே
திண்ணை மெழுகும் பெண்ணே
உன் உடலிலே பெண்ணே
இருபத்திரண்டு கண்ணே.

636 வெளுக்காத போர்வை
வெண்மையாக இருக்கும்
நிரப்பாத குடம்
நிறைந்தே இருக்கும்.

637 கையில் பந்தாடும்
கதிரவனுடன் வாதாடும்
கனலுக்கு இரையாகும்
கரிசாம்பல் பொடியாகும்.

638 செவி இல்லாத செவிடன்
செகம் பூராவும் திரிகிறான்;
கால் இல்லாத கபடன்
கண்ட இடமெல்லாம் போகிறான்.

639 முள்ளு முள்ளுக்குள்ளே
வைக்கோல் பத்தைக்குள்ளே
வந்திருக்கா சீமாட்டி
வயிற்றுப் பிள்ளையோடு.

640 அடுப்புவெட்டி வாரி வெட்டி
வன்னிமரம் தோய்பாக்கிக்
காய் அறுத்துக் கணக்குப் பார்த்தால்
லட்சமோ லட்சம்.

641 மூடித்திறக்கும் ஒரு கின்கிணிப் பெட்டி
அதற்குள்ளே ஒரு வெள்ளைக் கிண்ணம்
அதற்குள்ளே ஒரு நாவற்பழம்
அதற்கும் உள்ளே ஒரு நீலப்பழம்.

642 மஞ்சள் பட்டு உடுத்தி
மடிக்குள் பிள்ளையை வைத்து
கடைத் தெருவில் வீற்றிருப்பாள்
கண்டவர் மயங்கும் ராணி.

643 கருமை நிறத்தழகி
காடெல்லாம் சுற்றி வருவாள்
கண்டவுடன் ஓடுகிருள்
கான மழை பொழிகிருள்.

644 அப்பனே பறங்கிக் காயே
அடுப்பிலே ஏறி ஞயே
ஏறி யிறங்கிஞலும்
என்னை நீ மறந்திடாதே.

645 கற்ருழை மடல் நிறத்தாள்
காமனுடன் பிறந்தாள்
வெற்றிலை தின்றறியாள்
உதடோ சிவந்திருக்கும்.

646 கானகம் சென்றிரண்டு
கன்னிகைகள் கொண்டு வந்தேன்
ஒரு மகள் உழைப்பாளி
ஒரு மகள் சப்பாணி.

647 வட்ட வட்டக் குருவி
வால் இல்லாத குருவி
நெல்லுக்கிடந்த இடத்தில் எல்லாம்
துள்ளித் துள்ளி விளையாடும்.

648 இடிபிடி சுப்பல் பொறுக்கி
அரண்மனை வாசல் கட்டி
பார்க்க வந்த ராசாக்கள்
பளபள வென்று சிரித்தார்கள்.

649 கையுமில்லை காலுமில்லை
கட்டையன் பெண்டாட்டி
கைகொடுத்தால் எழுந்திடுவாள்
மொட்டையன் பெண்டாட்டி.

650 ஒருவன் ஓட்டிவர
இரண்டு இழுத்துவர
நெய் திரண்டுவர
நெருப்பு அருகில் வர.

651 மாடிமேல் மாடி கட்டி
குடியிருக்கும் மனிதனை
தொட்டால் குத்திடுவான்
பட்டால் கீறிடுவான்.

652 நாக்கை நாக்கை நீட்டும் பாம்பு
நல்ல சித்திரம் ஆடும் பாம்பு
தேவர் கையால் அடங்கும் பாம்பு
தேவாரதனைப் பாம்பு அல்ல.

653 சுற்றுவேன் அந்தச் செடியைச்
சூடேன் அந்தப் பூவை
நத்துவேன் அந்தக் காயை
நாடேன் அந்தப் பழத்தை.

654 பாவாடை உடுத்திருக்கும் பாவையல்ல
பருத்த சிறு தொந்தியுண்டு செட்டியல்ல
சுருண்டிருக்கும், வாலுமுண்டு சுவானம் அல்ல
சுவையான கறிக்குதவும் செப்புவீரே.

655 ஆராலோடிய குளத்திலே
அழகுச் சதுர வயலிலே
ஏரும் இல்லாமல் கலப்பையும் இல்லாமல்
எட்டு நாளைக்கு ஒரு வெள்ளாமை.

656 மோருரு வீதியிலே
முப்பது தென்னை மரம்
காய்க்காது பூக்காது
அத்தனையும் வெள்ளை மரம்.

657 காலையிலே கூவும் பட்சி
கந்தன் கொடியில் காணும் பட்சி
குப்பையைக் கிளறும் பட்சி
கொண்டை யொன்றை உடைய பட்சி

658 உடம்பெல்லாம் ரோமம், கரடி அல்ல
உயரத்தில் தாவிடுவான், அணிலும் அல்ல
பழம்தின்பான் பல்லைஇளிப்பான், மனிதன் அல்ல
மரங்களிலே தொங்குவான், வெளவால் அல்ல.

659 இரண்டு பெண்கள்
இரட்டைப் பிறவிகள்
ஒருத்தி கீழே வந்தால்
ஒருத்தி மேலே போவாள்.

660 வட்ட முகம் உண்டு
வாய் திறந்து பேசாது
காட்டக் கை உண்டு
கால் ஊன்றி நடக்காது.

661 முத்துக் கோட்டைக்குள்
மூன்று பேர் புகுந்தார்கள்,
புகுந்தவர்கள் வரவில்லை
போர் நடக்குது ரத்தம் சிந்துது.

662, அருணகிரி திருணகிரி மேடை
ஐநூற்றுக் காதவழி வாடை
இதைக் கண்டு சொன்னவர்க்கு
இரண்டு படி பாக்கு எட்டுக்கட்டு வெற்றிலை.

663 மஞ்சள் சேலை கட்டி
மங்கையர் பத்துப்பேர்
கயிற்றைப் பிடித்துக்கொண்டு
கடைதனிலே தொங்குகின்றார்.

664 சென்னபட்டணம் சிவப்பு
சீரங்கபட்டணம் கருப்பு
உடைத்துப் பார்த்தால் பருப்பு
தின்று பார்த்தால் கசப்பு.

665 வெட்டுவார் அழமாட்டேன்
கிள்ளுவார் அழமாட்டேன்
கடிப்பார் அழமாட்டேன்
சாயமும் பூசுவார் சாது என்னையே.

666 மூன்றெழுத்து முனிவரே
முதல் இரண்டு அழகரே
மூன்று கோட்டு முனிவரே
முழிமுழிக்கும் அழகரே.

667 கறுத்தவன் வளர்ந்தவன்
படர்ந்த தலைக்காரன்
எனக்குப் பெட்டி கொடுத்தான்
முரம் கொடுத்தான்.

668 எண்ணெய் வேண்டாத விளக்கு
எடுப்பார் கை விளக்கு
கண்ணீர் விட்டு
கரைந்திடும் விளக்கு.

669 கொத்துக் கொத்து ஈச்சங்காய்
கோடாலி ஈச்சங்காய்
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈச்சங்காய்.

670 முட்டைபோல பூ இருக்கும்
தாமரை அல்ல
கோலாகக் காய் காய்க்கும்
புளியும் அல்ல.

671 நிலத்தில் இருப்பான் நீரில் இருப்பான்
வாலோடு பிறப்பான் வாலையும் இழப்பான்
கை முளைக்கும் கால் முளைக்கும்
கத்தலும் தத்தலும் அதிகரிக்கும்.

672 சிமிழும் சிமிழும் சேர்ந்தாற் போல
சின்னக் கொண்டை முடிந்தாற்போல
அடியில் கெம்பு புதைத்தாற்போல
மேலே மஞ்சள் குளித்தாற்போல.

673 வட்ட வட்டப் பாய்
வாழ்வு தரும் பாய்
ஊரெல்லாம் சுற்றும் பாய்
ஒவ்வொருவருக்கும் வேண்டும் பாய்.

674 ஆடி அசைந்து வரும்
அங்கம் வளைந்து வரும்
தலைசாயும் நேரம் பார்த்து
தவமிருப்பான் விவசாயி.

675 முத்து மூடியிருக்கும்
முக்காடு போட்டிருக்கும்
முட்கள் நீண்டிருக்கும்
மிடுக்காக வீற்றிருக்கும்.

676 காட்டிலே கட்டை வெட்டி
கல்லோரம் ஏற்றம் போட்டு
நாட்டுக்குச் சீட்டு எழுதி
நடக்கிறார் தர்மராசா.

677 வேகாத வெய்யிலிலே
வெண்ணெய் பிசைந்து வைத்தேன்
உருகவில்லை ஒட்டவில்லை
உலர்ந்து விட்டது.

678 பூத்தபோது மஞ்சள்
பூத்ததும் சிவப்பு
காய்த்தபோது சிவப்பு
காய்த்ததும் கருப்பு.

679 சொன்னதைக் கேட்பான்
சொல்லச் சொல்லக் கேட்பான்
திரும்பச் சொல்ல மாட்டான்:
திருடன் மாதிரி இருப்பான்.

680 கத்தியை எடுத்தேன்.
கண்ட துண்டமாக வெட்டினேன்
துளி ரத்தம் சிந்தவில்லை.
ஒருவரும் அழவில்லை.

681 ஓட்டினால் வீடு கட்டி
உள்ளே புரி சுற்றி
வைத்திருக்கும் என்னை
விரும்பிடுவர் எல்லோரும்.

682 உச்சியிலே குடுமி உண்டு மனிதனல்ல
உருண்டையான வடிவம் உண்டு முட்டையல்ல
நீர்ததும்பி நிறைந்திருக்கும் குளமல்ல
நெற்றியிலே கண் இருக்கும் சிவனுமல்ல.

683 முதலெழுத்தால் பால் உண்ணலாம்
கடையிரண்டால் கானகம் செல்லலாம்
முதலும் முடிவும் தாத்தாவுக்கு
மூன்றெழுத்தில் ஒரு வார்த்தை.

684 அட்டைக்கு ஆயிரம் கண்கள்
முட்டைக்கு மூன்று கண்கள்
நான் வளர்த்த சிங்கத்துக்கு
ஒரே ஒரு கண்.

685 கோணக் கோண மூங்கில்
கொங்கு நாட்டு மூங்கில்
உங்கள் நாட்டிலிருந்து,
எங்கள் நாட்டுக்கு வரும்.

686 காதில்லை கேட்பதற்கு
கண்களில்லை பார்ப்பதற்கு
வாயுமில்லை பேசுதற்கு,
வந்தவருக்கு நீதி உண்டு என்னிடத்தில்.

687 அதிசயக் குளத்திலே
அற்புதக் குருவி ஒன்று
வாலினால் தண்ணீரை
வற்ற வற்றக் குடிக்குது.

688 உச்சியிலே பூ முடிவாள்
அணங்கும் அல்ல;
உயரப் போய்த் தொங்குவாள்
வௌவாலும் அல்ல.

689 பட்ட மரம் இரண்டு
படாத மரம் நான்கு
விசிறி இரண்டு
வெண்சாமரம் ஒன்று.

690 அத்துவானக் காட்டிலே
வித்துவான் குடை பிடிக்க
கத்துவானேன் கார்மேகா
கொட்டுவானேன் கார்மேகா.

691 அலை அலையாய் ஆடிவரும்
கடலும் அல்ல;
நிலையாக நில்லாது
நிலவும் அல்ல.

692 சகட விகட கர்ணம்
சங்கிலி நாம கர்ணம்
நாலு மூலை கர்ணம்
நடுவிலே கும்ப கர்ணம்.

693 செக்கச் சிவந்திருப்பாள்
செவ்வாழை போலிருப்பாள்
வாலும் முளைத்திருக்க
வந்திருப்பாள் சந்தையிலே.

694 ஓகோ மரத்திலே
உச்சாணிக் கிளையிலே
ஓட்டுச் சட்டியிலே
களிமண் இருக்கிறது.

695 பொட்டுப்போல விட்ட இலை
பொரி போலப் பூத்த பூ
தின்னத் தின்னக் காய்
தின்னாத பழமோ பழம்.

696 மாட மாளிகையில் வசிப்பான்
மன்னன் அல்ல.
கூட கோபுரத்தில் இருப்பான்
கடவுள் அல்ல.

697 தட்டை தின்னும் தாழை தின்னும்
சாமிநாதன் காளை
தண்ணீர் குடித்தால் செத்துப்போகும்
சாமிநாதன் காளை.

698 கால் இல்லாத கள்வன்
கால் உள்ளவனைப் பிடித்தான்
தலையில்லாதவன் அதைப் பார்த்து
கலகலவென்று சிரித்தான்.

699 நீரோடி நிலம் பாய்ந்து
நிலத்து வாழைக் குருத்தோடி
காம்போடி சிறிய கயிறோடி
காக்கை உட்கார இடமில்லை.

700 நாலு காலரே சோணை வாலரே
நாளை போகுது உந்தன் தலையே!
பத்துத் தலையரே பக்கத்துக் கண்ணரே
உரைத்தது யாரு உனக்கு இதையே!

701 கருப்புக் குதிரையும் வெள்ளைக் குதிரையும்
ஆற்றுக்குப் போகின்றன
கருப்புக் குதிரை ஆற்றுடன் செல்கிறது
வெள்ளைக் குதிரை வீட்டுக்குத் திரும்புகிறது.

702 வெட்ட வெளிக் காட்டுக்குள்ளே
விளக்கை வைத்துக்கொண்டு
விக்கி விக்கி அழுதுகொண்டு
விரைவாக ஓடுகின்றாள்.

703 ஆற்று மணலோ மணல்
அரசன் கோட்டையோ கோட்டை
கறந்த பாலோ பால்
கருப்பட்டியோ கருப்பு கருப்பு.

704 உண்டதை நினைப்பான்
உதையை மறப்பான்
உயிரையும் கொடுப்பான்
வழியும் நடப்பான்.

705 வாயாலே தின்று வாயாலே கக்கும்
வவ்வால் அல்ல
ஒரு முழம் வால் இருக்கும்
பூனையும் அல்ல.

706 பரமக்குடி ராசா மகள்
பத்துப் பிள்ளைக்காரி அவள்
பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில்
பலே கைகாரி அவள்.

707 சுற்றுவேன் அந்தச் செடியை
சூடேன் அந்தப் பூவை
கிள்ளுவேன் அந்தக் காயை
நாடேன் அந்தப் பழத்தை.

708 சத்தம் உண்டு கலகம் இல்லை
அடி உண்டு காயம் இல்லை
பூ உண்டு மணம் இல்லை.
முள் உண்டு வேலி இல்லை.

709 கருப்புச் சட்டை அணிந்தவன்
கபடம் அதிகம் உள்ளவன்
கூவி அழைத்தால் வந்திடுவான்
தன் கூட்டம் அனைத்தும் சேர்த்திடுவான்.

710 வானில் விரைந்து செல்லும்
விமானம் அல்ல
பாங்காய்ப் பறந்து செல்லும்
பறவை அல்ல.

711 மஞ்சள் பூக்கள் பூக்கையிலே
மாட்டேன் என்று சொன்னீரே!
பிள்ளையைப் பெற்றுக் கையில் கொடுத்தால்
கொஞ்சக் கொஞ்ச வருகிறீரே!

712 சங்கிலி சரப்பளி போட்டுக்கொண்டு
எங்கடி போருய் இராமக்கா
நீ தொட்டுக்கொண்டாய் நான் தவறிக் கொண்டேன்
நீ காதத்திலே நான் தூரத்திலே.

713 மூணு பொண்ணு ஒரு முகம்
மூத்த பொண்ணு ஆத்திலே
நடுப் பொண்ணு காட்டிலே
கடைசிப் பொண்ணு வீட்டிலே.

714 சின்னஞ்சிறு மாளிகையில்
சின்னச் சின்ன துரைகள்
குதிப்பார்கள் நீந்துவார்கள்
கும்மாளம் அடிப்பார்கள்.

715 சூழச்சூழ முள்ளுக் குத்தி
பச்சை வண்ணப் பட்டு உடுத்தி –
அய்யோ அவள் ஒருத்தி
ஆள் பார்த்து நிற்கிருள்.

716 சங்கீத இசை இசைந்து வரும்
சனக் கூட்டம் கூடி வரும்
கொட்டுமேளம் கொட்டி வரும்
குதித்துக் குதித்து ஆடிவரும்.

717 இறக்கை இல்லாத குருவிக்கு
இரும்பிஞல் மூக்கு
பாய்ந்து செல்லும் குருவிக்கு
பஞ்சிஞல் வாலு.

718 கொத்துக் கொத்தாய் காய் காய்க்கும்
கொடி முந்திரியும் அல்ல
கொடியிலே பிறந்து வளர்ந்து
கடையிலே வந்து விற்கும்.

719 வட்ட வடிவழகி
நீரில் வாழும் அழகி
வாடி வதங்கிஞலும்
வந்திடுவாள் பந்திக்கு.

720 ஆற்று மணலே மணலே
அள்ளி அள்ளித் தின்போம்
பாராங்கல்லேக் கல்லேக்
கடித்துக் கடித்துத் தின்போம்.

721 பாதுகாப்பதில் பலே ஆளு
பலனும் அவன் அடையான்
சண்டையிட மாட்டான்
பதுங்கிடவும் மாட்டான்.

722 வலைவீசி இரை பிடிப்பான்
செம்படவன் அல்ல
நூல் நூற்று வலை பின்னுவான்
தொழிலாளியும் அல்ல.

723 உருவம் இல்லான்; நிறம் இல்லான்,
கத்துவான்; பேசமாட்டான்,
ஓடுவான்; தலைகீழாய் விழுவான்,
உயரத்தில் இருப்பவன்—யார் அவன்?

724 பகல் எல்லாம் பட்டினி கிடப்பாள்
பிள்ளைக்கும் பால் கொடுப்பாள்
இரவெல்லாம் இன்பம் அடைவாள்
விடிந்தவுடன் விசனம் அடைவாள்.

725 வெட்டிக் காட்டில் விதை ஊன்றி
வீரமலைக் காட்டில் கொடி ஓடி
கண்டனூரில் பால் எடுத்து
கடை எல்லாம் புகையுது.

726 ஆராசூர் ஏரியிலே
அறுபத்தி எட்டுத் தென்னை மரம்
காயும் இல்லை பூவும் இல்லை
காக்கை உட்கார நிழலும் இல்லை.

727 நீரிலே பூக்கும் பூ
காய்க்காது பழுக்காது
வண்டு வந்து மொய்க்காது
கொண்டையிலே இருக்காது.

728 மூன்று அங்குலக் கோட்டை
மூவாயிரம் பேர் காவல்
பாங்காக உள்ளே
பதுங்கி இருக்கிறார் ராசா.

729 உச்சி சலசலக்கும்
உடல் நீண்டு இருக்கும்
நிறம் கருத்து இருக்கும்
நின்று பார்த்தால் கழுத்து வலிக்கும்.

730 கங்கையிலே பிறந்து வளர்ந்து
கடைகளிலே வந்து போயி
மங்கையின் உடலிலே மருவி
மங்காமல் ஜொலிப்பாள் ராணி.

731 கொம்பில் உண்டு; கிளையில் இல்லை
உலகத்தில் உண்டு; தேசத்தில் இல்லை
அம்மாவில் உண்டு; அப்பாவில் இல்லை
பஸ்சில் உண்டு; ரெயிலில் இல்லை.

732 ராஜாராணி உண்டு; நாடு அல்ல
இலைகள் பல உண்டு; தாவரம் அல்ல
அச்சு எழுத்து உண்டு; புத்தகம் அல்ல
ஆடை ஆபரணம் உண்டு; கடை அல்ல.

733 உருக்கிக் குடித்த நெய்யுக்கும்
உள்ளே கட்டின வெள்ளாடைக்கும்
வாரி முடித்த கொண்டைக்கும்
வகை சொல்லடா ராசாவே.

734 காட்டுமுட்டு எருவு கலகலங்குது
கப்பலேறி மஞ்சம் மினுமினுங்குது
அப்படிப்பட்ட அத்தானுடன்
எப்படி நான் பேசுவது?

735 வஞ்சி இளங்கொடியாள் அவள்
மேனி எல்லாம் கண்ணுடையாள்
கண் எல்லாம் சொல்லுடையாள்
சொல் எல்லாம் பொருளுடையாள்.

736 மூட்டை தூக்கி முத்தையன்
தத்தை அல்ல
தண்ணீரில் இருக்கும் தத்தையன்
தவளை அல்ல.

737 காலையில் தோன்றும்
கண்ணாடி போல் பளபளக்கும்
பச்சைப் புல்லில் துவண்டுவரும்
பவளம் போல் உருண்டு வரும்.

738 காடேறி மேயாத கருப்புப் பசு
கன்று கத்தாமல் குடிக்காமல்
கட்டாமல் கறக்காமல்
ஒரு பானை பால் தருகிறது.

739 ஆற்று மணலை அள்ளித் தின்கிற
நாங்கள் ஒரு சாதி
ஓணாங் கொடியை ஒடித்துத் தின்கிற
நாங்கள் ஒரு சாதி.

740 இருட்டுப் புதையிலே
இடி விழுந்த பாறையிலே
நான் வைத்த கட்டுச் சோறு
நனையாமல் இருக்குது.

741 பெண் : பக்கம் பழுத்த கிழவா
இன்னும் எத்தனை நாள் இருப்பாய்?
ஆண்: உள்ளே இருக்கும் கொட்டையைஎடுத்தால்
ஊழிவரை இருப்பேன்.

742 பளிங்கு மண்டபம் கட்டி
பாலாறு ஒன்று வெட்டி
மகாராணி ஒருத்தி
மஞ்சள் நீராடுகிறாள்.

743 வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்கு
விளக்கு ஏற்ற முடியாது
கருப்புப் பிள்ளையார் கோயிலில்
கால் வைக்க முடியாது.

744 வைக்கோல் துரும்பெடுத்து
வரிவரியாய்க் கோட்டை கட்டித்
திக்கில்லாத பிணம்
தெருவிலே கிடக்கிறது.

745 ஆற்றுக்கு அக்கரையில்
ஐந்தாறு தென்னை மரம்
காய்க்காது பூக்காது
கண்ணுக்கு எட்டாது.

746 கண்டவர்க்குக் கண் கூசும் கதிரோனும் அல்ல,
கொம்பு இல்லாமல் நடக்காது எருதும் அல்ல.
கொண்டவர்கள் உணவுதனைக் கொடுக்கா விட்டால்
கோமளமும் கண்ணுறங்கிக் கோணுவாளே.

747 பச்சைப் பட்டதனைப் பிடித்திழுத்து
பாங்காக அதனை மடித்தெடுத்து
அருசுவை உண்டி அன்புடன் அளித்து
தெருவில் விட்டுவிட்டேன் தேவியவளை.

748 காலையில் கோட்டை கட்டிக்
கடும் பகலில் யுத்தம் செய்து
மாலையில் பிரித்துப் போடும்
மாவீரன் அவன்.

749 இரட்டைக் குதிரை ஜோடி
கல்லு முள்ளு நாடி
களைக்காமல் ஓடி
காலைப் பார்த்து வாடி.

750 செக்கச் சிவந்திருப்பாள் செல்லாயி
சிங்காரக் கொண்டைக்காரி செல்லாயி
கண்ணைக் கவர்ந்திடுவாள் காவேரி
கடித்தால் காரிடுவாள் காவேரி,

751 பாதாளத்தில் பிறந்தவன்
பம்பரத்தில் சுழன்றவன்
இளம் வெயிலிற் காய்ந்தவன்
எல்லோர் வீட்டிலும் இருப்பவன்

752 எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
காய்ச்சுக் கிடக்குது ஓரத்திலே
எடுத்து எடுத்து நறுக்கிளுலே
எட்டுக் கல்லுத் தோடுதானே.

753 அடுப்பு சாதம் கொதிப்பதேன்
அரிசி அன்னமாவதேன்
இலங்கை அழிந்ததேன்
இரும்பு உருகுவதேன்?

754 வேற்றூரிலிருந்து வந்தாள்
வெண்பட்டு உடுத்திவந்தாள்
காற்றுமா திரிப் பறந்துவந்தாள்
ககனமெல்லாம் சுற்றிவந்தாள்.

755 மேல்புறம் கருப்பு
அடிப்புறம் சிவப்பு
உடைத்தால் பருப்பு
தின்ருல் கசப்பு.

756 மலையிலே மலைச் சரிவிலே
கெண்டை விக்கிக்குது
கெழுத்தி விக்கிக்குது
கீறிப் பார்த்தால் முள்ளு இல்லை.

757 கழுத்துண்டு, கையில்லை;
நாக்குண்டு, பேச்சில்லை;
வாயுண்டு, அசைவில்லை;
தொப்பியுண்டு, தலைமயிர் இல்லை.

758 இரண்டு கண் படைத்திருப்பாள்
எங்கள் ஆயாள் பையில் இருப்பாள்
வயிற்றிலே கத்தி கட்டி யிருப்பாள்
வந்தவரை வெட்டி வீழ்த்துவாள்.

759 சின்னச் சின்ன வாழைக்காய்
சிங்கார வாழைக்காய்
முந்நூறு பணம் பெற்ற
முத்து முத்து வாழைக்காய்.

760 கருநீலப் புடவைக்காரி
கண்டவர் மயங்கும் நாரி
கோலப் புள்ளிக்காரி
கொள்ளை அழகுக்காரி.

761 அர்த்த ராத்திரியிலே
ஆருமில்லா வேளையிலே
மழையில்லா நேரத்திலே
மாப்பிள்ளை குடை பிடிச்சிருக்காரு.

762 கன்னங் கருப்பழகி நான்
கட்டாணி முத்தழகி நான்
வரிசைப் பல்லழகி நான்
வாரி என்னை வாழ்த்திடுவார் காண்.

763 ராசா வீட்டுத் தோட்டத்திலே
ராணி வந்து வீசுற கதையைச் சொல்லவா?
காமினி வீட்டுத் தோட்டத்திலே
மோகினி வந்து வீசுற கதையைச் சொல்லவா?

764 சின்னப் பட்டு சிவப்புப் பட்டு
பின்னப் பட்டு வரும் பட்டு
என்னைக் கண்டு வெட்கப் பட்டு
நிக்குது அந்தத் தோப்புப் பட்டு.

765 கண்டவரை மயக்கிடும் கலை மடந்தை
எடுத்தவரை மயக்கிடும் இசை மடந்தை
கற்றவரை மயக்கிடும் கான மோகினி
களித்தவரை மயக்கிடும் கலா மோகினி.

766 நீலப் பட்டுக் காரி
நிலையில்லாப் போக்குக்காரி
ஊருக் குதவும் பாரி
உலகினர் வேண்டும் நாரி.

767 சிங்காரப் பொட்டழகி
சினிமாக் கட்டழகி
கண்ணைச் சிமிட்டுகிருள்
கண்டவரை மயக்கிடவே.

768 பனையூருக் கொல்லையிலே
பச்சைக் கம்பனைக் கண்டேன்
கோவிலூருக் கொல்லையிலே
கோலாட்டக் கம்பனைக் கண்டேன்.

769 மாமரத்துத் தோப்புக்குள்ளே,
மரத்து மரத்தடியிலே
ஓட்டுத் தோலுக்காரி
உடம்பெல்லாம் சீக்குக்காரி.

770 சின்னப் பட்டு சிகப்புப் பட்டு
தேசமெல்லாம் தேவைப் பட்டு
நம்மெல்லோராலும் விரும்பப்பட்டு
நாடெல்லாம் திரியும் பட்டு.

771 சின்னச் சதுரப் பெட்டி
சிங்கார வர்ணப் பெட்டி
கற்றோர்க்குக் கைப் பெட்டி
விற்றோர்க்குப் பணப் பெட்டி.

772 டாங்கு டூங்கு மரம்
நாதாங்கி போட்ட மரம்
இரும்பு துளைத்த மரம்
இருபேரும் ஏறும் மரம்.

773 சாத்தின கதவு இருக்க
ஏத்தின விளக்கு இருக்க
இராத்திரி வந்தது யார்?
அந்த டங்கு டிங்குக்காரன் யார்?

774 மண்ணிலே மரம் பிறந்து
மகாதேவருக்கு அடிமைப் பட்டு
கண்ணிலே கலிங்கம் போட்டு
கதறுதாம் காளங் கன்று.

775 திருப்பதியிலே திருத்தணியிலே
திருத்திக் குத்தின சேவல்
நடுக்கடலிலே சமுத்திரத்திலே
கூவா மல்லிகைச் சேவல்.

776 காசுபோல் இலை இருக்கும்
கமரிமான் பூ பூக்கும்
தின்னக் காய் காய்க்கும்
தின்னாத பழம் பழுக்கும்.

777 நீர் ஓடி நிலம் பாய்ந்து
நிலத்து வாழைக் குருத்து விட்டு
கார் ஓடிய மணலிலே
கதுவாளி முட்டை யிட்டது.

778 பாதாளத்திலே பிறந்து
பவுசத்திலே வளர்ந்து
ஒரு பொழுதிலே சமைந்து
ஊரெல்லாம் ஆசைப்படுவது.

779 எட்டுக் கட்டுக் கட்டி
இடைக்குக் கட்டுக் கட்டி
தெற்கே போகிற மாப்பிள்ளை
திரும்பி வரமாட்டாரு.

780 ஏறு ஏறு சங்கிலி
இறங்கு இறங்கு சங்கிலி
எட்டாத கொம்பெல்லாம்
தொட்டுவர் சங்கிலி.

781 காதுமில்லை இறகுமில்லை
கணப்பொழுதில் கோடி காத மோடும்
ஆறுக்கு அஞ்சாது மலைக்கு மயங்காது
எதற்குஞ் சலிக்காது இதென்ன உரைப்பீரே!

782 சாயங்கால நேரத்திலே
சமுத்திரக்கரை ஓரத்திலே
மாயமான கம்பு ஒன்று
மனிதன் போல் பேசுது.

783 வந்த பிற்பாடு வந்தீர்களே
வந்துவிட்டு ஒருதரம் போனீர்களே
போய்விட்டு ஒருதடவை வந்தீர்களே
இனிமேல் போனால் வருவீர்களா?

784 ஆனைகிரி மலைமேலே
ஆடுகின்ற பச்சை மயில்
கள்ளர் கையால் குத்தப்பட்டுக்
கலங்கு தந்தப் புள்ளிமயில்.

785 கத்திபோல் இலை இருக்கும்
கமரிமான் பூ பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும்.

786 முட்டையிடும் குஞ்சு பொறிக்கும்
முப்பது நாள் அடை காக்கும்
வட்டமில்லாக் கோயில் குடை பிடிக்கும்
கறியும் ஆகும் மகான்களுக்கே.

787 ஆனை சேனை அறுபது பேர் கூடி
வாளறுத்துக் கூறுபோட்டு வன்னி மரம் பிளந்து
நாலு கால் சிலம்பு கட்டி
நடுத் தெருவில் போற பெண்ணே.

788 நாலு மூலை நாடகசாலை
நடுவிலிருக்கும் பாடகசாலை
ஆடும் பெண்கள் பதினாறு
ஆட்டி வைப்பவர் இரண்டு பேர்.

789 ஏறினால் வழுக்கும்
இலையென்றால் சுருளும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும்.

790 ஏழு ஏழு முத்து மயில் ஏழு
இருபுறமும் கல்லிழைத்த தங்க மயில் ஏழு
வாதாடிச் சூதாடி வந்த மயில் ஏழு
வரிசையுள்ள அத்தை மக்கள் பதினான்கு பேர்.

791 கருவமணி இருசரம்
கண்டெடுத்துக் கோர்ப்பவர்க்கு
நாடு தருவோம் நகர் தருவோம்
நல்லமுத்துச் செட்டி மகளைத் தருவோம்.

792 செக்கச் சிவந்திருப்பாள் எங்கள் அக்கா
செங்களனி பூத்திருப்பாள் எங்கள் அக்கா
வாலும் முளைத்திருப்பாள் எங்கள் அக்கா
வந்திருப்பாள் சந்தையிலே எங்கள் அக்கா.

793 ஆகாயத்திலே ஊஞ்சலாடுது அழகு மயில்
அத்தை வீட்டு விருந்துக்கு வருது அழகு மயில்
போட்ட தெல்லாம் திங்குது புள்ளி மயில்
போற போக்குத் தெரியல்லே பச்சை மயில்.

794 விருந்துக்கு முந்திடுவான்
வீதிதோறும் கிடந்தழிவான்
கொட்டக் கொட்டத் தின்றிடுவான்
பட்டிக்கு இரையாவான் பாவிமகன்.

795 எண்ணெய் வேண்டாத விளக்கு
எடுப்பார் கை விளக்கு
கண்ணீர் விட்டுக் கலங்கிடும் விளக்கு
தன்னைத் தானே விழுங்கிடும் விளக்கு.

796 கீரை விதைகொண்டு தூவியிருப்பார்பாத்தியல்ல
கிருஷ்ணனும் அங்கிருப்பான் கோகுலமல்ல
பேரும் ஒன்றுண்டு பெருமைதனை உரைக்க
சீரும் சிறப்புமிக்க இதனைச் செப்புவாயே.

797 சின்னச் சின்ன மரமே சிங்கார மரமே
செட்டியார் வைத்திருக்கும் சிகப்பு மரமே
எண்ணத்தை வடிவாக்கும் இணையற்ற மரமே
இயற்கைதனை உருவாக்கும் எழில் பெற்ற மரமே.

798 பூவையர் கையிலிருக்கும் பூச்சியைப் பிடித்து வரும்
வாயிற் பற்களுண்டு வர்ணங்கள் பலவுண்டு
மேலேறிப் பிராண்டும் பெருக்கும் அழுக்கெடுக்கும்
மேதினியில் வாழ்வோரே உரைப்பீரே
உண்மைதனை.

799 புரியாத மொழி பேசும்
புவனமெல்லாம் பார்த்து வரும்
பணம் கொடுத்தால் பறந்து வரும்
பத்தாயிரம் காதமானாலும் பாய்ந்து வரும்.

800 ஐந்து காசுக்கு ஐம்பது காதம் பறப்பான்
அடிபட்டுக் குத்துப்பட்டு ஓடிவந்து சேதி
சொல்வான்
பகலில்லை இரவில்லை வெயிலில்லை மழையில்லை
ஊரூராக ஓடித்திரிந்தே ஒருவரையே
கைபிடிப்பான்.

801 வேண்டும் குளம் என்ன பெண்ணே
விளையாடும் குளம் என்ன பெண்ணே
மணக்கும் குளம் என்ன பெண்ணே
கணக்காய்ச் சொல் என் செல்லப் பெண்ணே.

802 வட்டக் குருவியைத் தட்டித் தட்டி
பொத்தல் போட்டுப் பொத்திப் பொத்தி
தண்ணீருக்குள் போட்டேன் தளதளங்க
கண்ணீர் விட்டது கண் கலங்க.

803 மண்டூருத் தோட்டத்திலே
குண்டுப் பண்ணி படுத்துக் கிடக்கு
பிடித்து வாடா பெரிய கருப்பா
அடித்துக் கொல்லுடா ஆம்பிளை சிங்கம்.

804 நாடி நாடி நீட்டும் கை
தேடித் தேடி அலையும் கை
கோதிக் கோதி முடிக்கும் கை
ஊதி ஊதி ஓட்டும் கை.

805 எண்ணெய் இல்லாத விளக்கு
எலெக்ட்ரிக் விளக்கு மல்ல—அது
கண்ணைப் பறிக்கும் சோதி விளக்கு
கடையில் வாங்காத விளக்கு.

806 வானத்திலே பறக்குமது வல்லூருமல்ல
மேகத்தைப் பிளந்து செல்லுமது பருந்துமல்ல
இருட்டிலே திரியுமது ஆந்தையுமல்ல
இயம்பிடுவீர் அதையுந்தான் என்ன வென்றே.

807 பச்செ பச்செ டாக்டர்
பால் பால் டாக்டர்
குண்டுச் சட்டி டாக்டர்
குதிரை வால் டாக்டர்.

808 அம்பலூர் ரோட்டிலே கம்பளி விரிச்சிருக்கு
அம்பலகாரர் மகளைக் கைபிடித்து இழுக்கிறான்
அவள் ஐயோ என்கிறாள்
அவன் சித்தெபொறு என்கிறான், என்ன ?

809 கோணக் கோணப் புளியங்காய்
கொங்கு நாட்டுப் புளியங்காய்
உங்கள் நாட்டிலே யிருந்து
எங்கள் நாட்டிற்கு வருகிறது.

810 நாக்கை நாக்கை நீட்டும் பாம்பு
நாம் எல்லோரும் நாடும் பாம்பு
நல்ல சித்திரம் ஆடும் பாம்பு
நானிலத்தோர் அடங்கும் பாம்பு.

811 முத்துச் சிலம்புக்காரி முப்பணத்து ஓலைக்காரி
தண்டை சலங்கைக்காரி தரணியில் திரியும் நாரி
மின்னல் நடைக்காரி மின்சாரப் பைக்காரி
அவளைத் தொடுவானேன் அவஸ்தைப்
படுவானேன்.

812 தக தக தட்டுப்போல
தாமரை மொட்டுப்போல
இந்திரன் எழுத்துப்போல
இராவணன் சுருட்டுப்போல.

813 குண்டு குண்டு ஈச்ச முள்ளு
கோடாரி ஈச்ச முள்ளு
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈச்ச முள்ளு.

814 பச்சைப் பச்சென்றிருக்கும் பாவக்காயு மல்ல
பக்கத்தில் முள்ளிருக்கும் பலாக்காயு மல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல
உருக்கினால் நெய்யொழுகும் வெண்ணெயு மல்ல.

815 தோட்டத்தலங்காரி துரைமகள் சிங்காரி
கையிலடங்குவாள் களிப்பை உண்டாக்குவாள்
தேட்டமுடனிக் கதையைச் சொல்வோர் தம்மை
தேவருக்கு மேலாகச் செப்பலாமே.

816 அந்தரத்தில் பறந்திடும் பருந்தே யல்ல
அழகான வாலுண்டு அனுமாரல்ல
விந்தையுடன் கட்டுண்ணும் கட்டுமல்ல
வேந்தரது திருநாமம் அவர்க்கே உண்டு.

817 சுத்திச் சுத்தி வரும் புடலம்பூ
சூதாடி வரும் புடலம்பூ
கச்சேரிக்குப் போகுமாம் புடலம்பூ
கரணமும் போடுமாம் புடலம்பூ.

818 சின்னச் சின்ன முள்ளுத் தைத்தால் பொறுக்க மாட்டேன்
சிங்காரக் கத்தியை உருவமாட்டேன்
மாணிக்கக் கல்லுமேலே மிதிக்கமாட்டேன்
பங்காரக் குதிரைமேலே ஏறமாட்டேன்.

819 நாலு முக்குப்பட்டி
நந்தவனப் பட்டி
ஓடும் குதிரைக் குட்டி
வீசும் புளியாக்கை, என்ன ?

820 ஆயிரம் பேர் தச்சர் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண்பட்டு
உடைந்ததாம் மண்டபம்.

821 காயும் கோணற் காய்
கொள்ளடா மைத்துனா
கதையும் விடுவித்தேன்
சொல்லடா மைத்துனா.

822 ஆழக் குழி வெட்டி
அதிலே ஒரு முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை.

823 சிறு கடலும் பெரு கடலும் பொங்கிவர
சிறு முத்தெல்லாம் குதித்துவர
மட்டத் தேங்காய் மலர்ந்துவர
சங்கிலி போட்டு இழுத்துவர.

824 வருகிறதும் போகிறதும் என்னாலே
வந்துகிடக்கிறது மேலாலே
சாகப்போகிறதும் உன்னாலே
செத்துக் கிடக்கிறதும் என்னாலே.

825 சந்தனம் புனுகுபோல் விதித்தகதை சொல்லவா
தகப்பனார் ஓடிவந்து அடித்தகதை சொல்லவா
செங்காடு தீப்பட்டு வெந்தகதை சொல்லவா
தேசமெங்கும் ஒருபுறமாய் மாண்டகதை
சொல்லவா.

826 வட்டமதி போலிருக்கும் வள்ளிக்கொடி தாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்-சுட்டால்
அர்ஹரா என்னுமே அம்பல சோமாசி
ஒருநாள் விட்டனீ துரையே.

827 மானத்திலே மாசி
பூமியிலே தேசி
எடுக்காத அங்கம்
கோர்க்காத சரம், என்ன?

828 நீண்ட உடலிருக்கும் நேரே படமிருக்கும்
தீண்டும் போதே யெழுந்து சீறுமே
வேண்டினபேர் மந்திரத்திற் கட்டினதோர்
பாட்டினிலே நின்றாடுஞ் சுந்தரஞ்சேர்
பாம்புமல்ல.

829 கல்கட்டி மதிலோரம் கொல்லை
அவள் பேரு தில்லை
அவளுக்கு ஒருவருமில்லை
அவளுக்கு ஆறு மாதம் பிள்ளை.

830 காலுமில்லை கைகளுமில்லையே
சாலுபோன்று வயிறு தழைக்குமே
கோலக் கண்ணிற் சோறுண்டு குதித்திடும்
ஓலம் செய்யும் ஒருவர் தனைத் தொட.

831 சிறுமலை போன்ற கரிய மேனி
இடர் செய்தவன் உயிருக்கு ஹானி
கோயில் அரண்மனையில் வசிக்கும் ஞானி
இருந்தும் இறந்தும் விலையுயர்ந்த தானி.

832 வெள்ளரிப்பழம் வெடித்திருக்கும் கட்டு
வாருமில்லை
ராஜா மக்கள் ஓடிப்போகிறூர் பிடிப்பாருமில்லை
ரோஜாப்பூ மலர்ந்திருக்குது கிள்ளுவாருமில்லை
வேந்தரே இதன் கருத்தை உரைத்திடீரே.

833 பிள்ளை பிறந்தது
எழுந்து நின்றது
நான்கு பேரைக் கடித்தது
அந்தப் பிள்ளை பேரென்ன?

834 நடவா எருமை நாலு சேர் பாலைக்
கடிதே ஈயும் காலையும் மாலையும்
பிடி மேய்ச்சலில்லை; போரவலோடு
குடி கன்றுமில்லை; குலவாயனுளன்.

835 வெளுத்த வயல்
கருத்த விதை
கையால் விதைப்பது
வாயால் பொறுக்குவது.

836 அண்ணனுக் கெட்டாதது
தம்பிக் கெட்டும்
ஆணுக் கெட்டாதது
பெண்ணுக் கெட்டும்.

837 பச்சைப் பச்சைப் பல்லக்கு
பன்னீர் வாசப் பல்லக்கு
இரும்பா லடித்தாலும்
திரும்பாத பல்லக்கு.

838 ஜன்னல் பின்னல் கயிறு
ஜாதி லிங்கக் கயிறு
எண்ணெய் படாத கயிறு
இது என்ன கயிறு?

839 சின்னப் பொண்ணும் சின்னப் பையனும்
சிரித்துக் கட்டின தாலி
சிக்கில்லாமல் அவிழ்த்தவர்க்கு
சென்னைப் பட்டினம் இனாம்.

840 பட்டை பட்டை நீக்கி
பதினாறு பட்டை நீக்கி
முத்துப் பட்டை நீக்கி
முன்னே வருகிறாள் சீமாட்டி.

841 பிடிப்பிடி சுப்பல் பொறுக்கி
அரண்மனை வாசல் கட்டி
பார்க்க வந்த ராசாக்களெல்லாம்
பல்லை இளித்தார்களாம்.

842 பத்து விரல் பந்தாட
அஞ்சு விரல் அமர்ந்திருக்க
சூரியனோடு வாதாட
எமனோடு போராட.

843 பந்தக்கால் நாலு
பவளப்பல் பத்து
வெள்ளித்தடி இரண்டு
வெண்சாமரம் ஒன்று.

844 ஈரேழு பதினாலு லோகங்களதிலே
இருபுறமுந் தச்சரமைத்திட்டது மதிலே
மாமேரு புளியமரவிதையு மதிலே
வந்தாடும் பெண்களுக்கு மாலுண்ட மதிலே.

845 தச்சனடிக்கத் தமர் கிளம்ப
தையலம்மா ளேறி மிதிக்க
கொட்டை பிதுங்கக் கோது பிதுங்க
கொட்டையில்லாப் பழம் என்ன பழம்?

846 முள்ளு முள்ளுக்குள்ளே
முந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோற் போருக்குள்ளே
கண்டெடுத்தேன் வைரமணி,

847 முத்துக் கருப்பனை அழையடா
முதுகுத் தோலை வாங்கடா
பச்சை வெண்ணெயைத் தடவடா
பாவுள்ளே போட்டு அடையடா.

848 அங்குமிங்கும் அலைவதிரண்டு
பக்கம் பக்கமாய்ப் பார்ப்பதிரண்டு
கிண்ணொலி தன்னைக் கேட்பதிரண்டு
எட்டி யெடுத்துக் கொள்வதிரண்டு.

849 நலமாய் இலங்கும் நாசியில் அமரும்
காதுகள் இரண்டும் கட்டி அணைக்கும்
கன்னத் தழுந்தும் கற்றோர் தமக்கு
நேசத்துடனே நெறி காட்டிடுமே.

850 முத்துக் கிருஷ்ணனைப் பிடித்து
முதுகுத் தோலை உரித்து
பச்சை வெண்ணெயைத் தடவி
பழைய பைக்குள் போட்டு.

851 அக்காள் தங்கை உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்டக் கிட்ட வந்தாலும்
தொட்டுக் கொள்ள முடியாது.

852 கண்ட துண்டமாகக் கரியைத் தின்பேன்
கண்கள் இல்லாமல் காதம் நடப்பேன்
தாகம் இல்லாமல் தண்ணீர் குடிப்பேன்
குரல் இல்லாமல் கூச்சல் போடுவேன்.

853 அண்ணன் தம்பி மூன்று பேர்
ஒருவன் காட்டில் வசிப்பான்
ஒருவன் வீட்டில் வசிப்பான்
ஒருவன் நீரில் வசிப்பான்..

854 சிலு சிலுங்குது ஒரு குருவி
சிதறிப் பாயுது ஒரு குருவி
ராசா மடியிலே இருக்குது ஒரு குருவி
மக்கட்டுக் கட்டுது ஒரு குருவி.

855 சொல்லொன்று சொன்னவுடன் நில்லாமல் ஓடுகிறுன்
ஓடுகிற வழி தெரிகிறது உருவம் தெரியவில்லை.
கையால் பிடிக்க முடியாது, கண்ணுல் பார்க்க முடியாது
காதால் கேட்கலாம் கருத்துடன்சொல்வாய் நீயே

856 சுருளோடே சுருளுவரக் கண்டியா பெண்ணே.
சுருளிருக்க விரிவோடக் கண்டனே ராஜா.
வில்லோடிப் புல்மேயக் கண்டியா பெண்ணே.
இரண்டு கொம்புடனே மான் வரக் கண்டனே ராஜா.

857 காலையில் நான்கு காலோடே
பகலில் இரண்டு காலோடே
மாலையில் மூன்று காலோடே
முடிவில் எட்டுக் காலோடே.

858 காசி ராஜா பெண் டில்லி
அவள் வயிற்றில் ஆறுமாசம் பிள்ளை
அவள் பூசுறது அத்தர் பில்லை
அவள் யாரோடும் பேசுறது இல்லை.

859 முன்ஞெரு ஊரின் பேராம், முதலெழுத்தில்லா விட்டால்
நன்னகர் மன்னர் பேராம், நடுவெழுத்தில்லா விட்டால்
கன்னமாம் விலங்கின் பேராம், கடையெழுத் தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம், உரைப்பீரவ்வூரின் பேரை.

860 மூன்று எழுத்தில் ஒரு திசையின் பெயர்
முதல் எழுத்து இல்லாவிடில் குதிரை
இடை எழுத்து இல்லாவிடில் வாள்
கடைஎழுத்து இல்லாவிடில் ஆசைப்பெருக்கமாம்.

861 மூன்று எழுத்தில் ஒரு மரத்தின் பெயர்
முதல் எழுத்து இல்லாவிடில் எண்ணின் பெயர்
இடையெழுத்து இல்லாவிடில் பூமியின் பெயர்
கடையெழுத்து இல்லாவிடில் அரையின் பெயர்.

862 மூன்று எழுத்தில் ஒரு ஆண்டின் பெயர்
முதலும் கடையும் சேரில் திற
இடையும் முதலும் சேரில் ஒரு நிறம்
இடையும் கடையும் சேரில் மூன்று வள்ளல்களில் ஒருவர்.

863 மூன்று எழுத்தில் ஒரு வார்த்தை
துள்ளித் துள்ளி ஓடும் மீன்
முதல் எழுத்தை நீக்கிவிட்டால் அன்பும் பெருமையுமாம்
நடு எழுத்தை நீக்கிவிட்டால் 'ஆம்' என்பதற்கு மாற்றுச் சொல்.

864 அக்கரைக்கும் இக்கரைக்கும் காலூன்றி
அழகான சங்கிலியை மேல்பூட்டி
வெள்ளித் திருகாணியைச் சுழற்றிவிட்டால்
வீசம் நாழிகையில் போய்விடும்.

865 ஆற்றைப் பறிக்கிறது ஒன்று
ஆற்றைத் தாண்டுவது இரண்டு
செடியை வளைக்கிறது மூன்று
செடிக்குள்ளே புகுவது நான்கு.

866 வாராய் போராய் என்னாலே
வந்திருக்கிறார் உன்னாலே
சாகப் போகிறாய் என்னாலே
செத்துக் கிடக்கிறார் உன்னாலே.

867 இலுக்கான் முலுக்கான் பூ பூத்து
சிப்பிலி தட்டிலே வாரி வைத்து
போறவங்க வருகிறவங்க எல்லாம்
ஐய்யோ ஐய்யோ என்கிறாங்க.

868 மூன்று எழுத்து ஒரு வார்த்தை
இரத்தக் கலப்புள்ள உறவினன்
நடு எழுத்தை நீக்கிவிட்டால் தவித்திடுதல்
கடை எழுத்தை நீக்கிவிட்டால் மூச்சை
உள்ளடக்குதல்.

869 மூன்று எழுத்து ஒரு வார்த்தை
குற்றாலம் போனால் பார்க்கலாம்
குளித்துக் குளித்து ஆடலாம்
கும்மாளம் போடலாம்.

870 மூன்று எழுத்தில் ஒரு சோதி
முன் இரண்டும் சேரில் உண்மை
முதலும் கடையும் சேரில் புருஷன்
கடையும் இடையும் சேரில் ஒரு எண்.

871 முதலில் எட்டு
இடையில் ஐந்து
கடையில் மை
எல்லாம் சேர்ந்தால் மேன்மை.

872 தலையில் காலும்
இடையில் தசமும்
எல்லையில் வில்லும் சேர்ந்தால்
எல்லோரும் விரும்பும் பொருளதுவே.

873 முதலில் ஒன்று
நடுவில் கால்
கடையில் ர்
விடை என்ன?

874 பாளைபோல் இருக்கும் பூ
பார்த்தவர் விரும்பும் பூ
தலையிலே சூடாத பூ
தரணிதனில் என்ன பூ?

875 நீல நிறத்து அழகி நான்
நித்தம் வேண்டும் அழகி நான்
ரச அழகி, ருசி அழகி நான்
விலையும் ஏறிவிட்டேன் நானேதான்.

876 தவழ்ந்து விளையாடும் கிளி
தரணியில் உள்ளோர் விரும்பும் கிளி
பேசத் தெரியாத கிளி
பேசாமலும் இருக்காத கிளி.

877 உயிர் இன்றி ஊரெல்லாம் திரியும்
உருவம் இன்றி ஓடித் தெரியும்
கைகள் இன்றித் தொட்டு விளையாடும்
கால்கள் இன்றி கண்ட இடமெல்லாம்வரும்

878 உயரத்தில் இருக்கும் ராஜா
ஊர் பூராவும் இருக்கும் ராஜா
உயிரைக் கொடுக்கும் ராஜா
உடலெல்லாம் தொடும் ராஜா.

879 உருண்ட முக ஒய்யாரி சிங்காரி
ஊருக்கெல்லாம் உதவும் நாரி
பிடித்துக் கசக்கிப் பிழிந்து எடுத்தாலே
பித்த மெல்லாம் தீர்த்திடுவாள் பேருபகாரி.

880 இழுக்க இழுக்க நீளும்
இருந்தாலும் அந்துவிடும்
விடவிடச் சுருங்கும்
விட்டு விட்டால் ஒடுங்கும்

881 மூன்று அங்குலக் கோட்டை
முப்பத்திரெண்டு பேர் காவல்
பாங்காக உள்ளிருக்கார் ராஜா
பவனி வர ஏங்குகிறார் ராஜா.

882 உயரத்தில் காய்க்கும் காய்
ஊரெல்லாம் கிடைக்கும் காய்
சாமி வேண்டும் காய்
சகலரும் விரும்பும் காய்.

883 காசைக் கொடுத்துக் கடையிலே வாங்கினுள்
பையிலே போட்டு பவிசாக வைத்திருந்தாள்
வாயிலே போட்டு வர்ணம் காய்ச்சினுள்
பச்சிலைத் தோப்புக்குள்ளே பார்த்தால் தெரியும்.

884 கண்டதை எல்லாம் தின்ருன்
காசைக் கொடுத்துக் கடையில் வாங்கினுன்
அமுக்கி அடித்துக் குடித்தான்
அப்பாட என்று சொன்னுன்.

885 சப்தம் செய்யும் மரம்
சாய்ந்து வளரும் மரம்
கோபம் கொள்ளும் மரம்
கொண்டால் எரியும் மரம்.

886 அக்கினிப் பழத்தைக் கக்கி விழுங்குதே
அது என்னடி கண்ணே?
வாலைப் பிடித்தால் வாயைப் பிளக்குதே
அதுதான், என் கண்ணுளா.

887 மலையிலே வயிரம் பாய்ந்து
மகாதேவருக்குப் பூசை செய்து
இடுப்பிலே சலங்கை கட்டிக்
கதறுதாம் காளங் கன்று.

888 வெள்ளை மூக்கு ராசா துள்ளித் துள்ளி விழுவான்
சப்பை மூக்கு மந்திரி உப்பை ஒட்டிக் கிடப்பான்
கருப்புத் தலைக் காவலன் கரைந்தோடி விடுவான்
சிவப்புடுத்த சேவகன் சீறிச் சீறி விழுவான்.

889 கோணக் கோணக் கோட்டைகளாம்
கோட்டைக்குள்ளே கோடி முத்தாம்
முத்துக்குள்ளே ராசாத்தி
முணு முணுத்து அழுவாளாம்.

890 சின்னப் பொண்ணும்
சின்ன மாப்பிள்ளையும்
சேர்ந்து கட்டிய வீடு
சிக்கல் இல்லாமல் எடுப்பவர்களுக்கு
சென்னபட்டணம் பாதி.

891 இரண்டு கால் உண்டு
எட்டிப் பிடிக்க முடியாது
நான்கு கால் உண்டு
நடந்து செல்ல முடியாது
முதுகு உண்டு முகம் இல்லை.

892 தெற்கே இருந்து வருது பாரு
தேர்க்குச்சி போலே
அது போட்டு இருக்கும்
நகையைப் பார்த்தால்
முத்துச் சரம்போலே.

893 செம்மண் உருண்டை உருட்டிச்
சீரகப் பொடியைத் தூவி
ஐந்து விரலால் அடித்து

ஆதித்தியனுக்குக் காட்டி
அக்கினி பகவானுக்குக் கொடுத்தேன்.

894 கூர்முள் இரண்டிருக்கும், கருவேல் அல்ல
கூசாமல் மணி அடிக்கும், கோயில்மணி அல்ல.
இரவிலும் தூங்கான் பகலிலும் தூங்கான், எமன் அல்ல.
சுவரினிலே தங்குவான், பல்லி அல்ல
துணிந்து பொழுதினை உரைத்திடுவான், சூரியன் அல்ல.

895 பட்டை உண்டு, கட்டை இல்லை
இலை உண்டு, கிளை இல்லை
பூ உண்டு, மணம் இல்லை
பழம் உண்டு, விதை இல்லை
கன்று உண்டு, மாடு அல்ல.

896 பச்சைக் கன்னி மடிபட்டாள்
பவளக் கன்னி பொடிபட்டாள்
வெள்ளைக் கன்னி பிடிபட்டாள்
மூன்று கன்னியரும் மறைபட்டார்
சிவப்புக் கன்னி எதிர்ப்பட்டாள்.

897 சந்திரனே சூரியனே மாமா
மந்திரி மகள் மாண்டு கிடக்கிறாள்
அவள் கிடக்கிறாள் அறுத்துக் கட்டற சாதி
கோட்டைக்குள்ளே புகுந்தால்
குத்துப்பட்டுச் சாவாள்.

898 மதுரைமான் ஏரியிலே மான் வந்து நிற்கிறது
கட்டடா பிடியடா கள்ளக் கயிறு போடடா
இந்த விடியை விடுவித்தவர்க்கு
நூறு பாக்கு நூறு வெற்றிலை
சுண்டு விரல் குற்றுச் சுண்ணும்பு.

899 மூன்று எழுத்து ஒரு வார்த்தை
ஒரு வகை மரம்
நடு எழுத்தை நீக்கிவிட்டால்
தொடர்ந்திடும் துன்பமாம்
அதுவே யுகங்களில் ஒன்றுமாம்.

900 மூன்று எழுத்தில் ஒரு வார்த்தை
மாதம் ஒன்றின் பெயர்
நடு எழுத்தை நீக்கிவிட்டால்
நல் இரும்பு ஒரு கருவி
கடை எழுத்தை நீக்கிவிட்டால் காய்

901 கள்ளவுள்ளங் கொண்டிரவு வேட்டையாடும்
கடிதடைந்து காதினில் மந்திரங்களோதும்
துள்ளலிராகம் பாடிச் சுற்றி வரும்
துணைக் கரத்தால் தள்ளிடினும் போகாது
விள்ளுமெய்யிற் குறிப்படுத்தும் வீணைசெய்யும்.

902 நெட்டை குட்டை
பட்டப்பகல் எனக்குப் பகை
அடித்தால் போகேன்
நின்றால் நிற்பேன்
நடந்தால் நடப்பேன்.

903 வானத்தில் ஒரு கல்
பூமியில் ஒரு கல்
அரிசியில் ஒரு கல்
தண்ணீரில் ஒரு கல்
வெற்றிலையில் ஒரு கல்.

904 ஏணி, ஏணி மேலே கோணி
கோணி மேலே குழாய்
குழாய் மேலே குண்டு
குண்டு மேலே புல்லு
புல்லு மேலே எள்ளு.

905 நாலுலக்கை குத்திவர
இரண்டு முறம் புடைத்துவர
துடுப்புத் துழாவிவர
வெண்சாமரம் வீசிவர
துரைமக்கள் ஏறிவர.

906 கதிரவன் கிரணத்தைத் தாக்கும்;
வானத்தைத் தடுக்கும்;
காற்றைக் கண்டால் கவிழ்ந்துபோகும்;
மாட்டையும் ஓட்டும் மாநிலத்தில்
கைத்தடியும் ஆகும் கனவான்களுக்கே.

907 மானத்துக்குப் போனேன்
மங்கம்மாளைக் கண்டேன்
ஒரு கட்டு ஓலை தந்தாள்
அதை எண்ணவும் முடியவில்லை
எழுதவும் முடியவில்லை.

908 எட்டு எழுத்தில் ஓர் ஊரின் பெயர்
ஒன்றும் இரண்டும் சேரில் மேன்மை
மூன்றும் நான்கும் சேரில் எதிர்மொழி
ஐந்தும் ஆறும் சேரில் வாசனை
ஏழும் எட்டும் சேரில் வேர்.

909 நெய்யாத புடவையைக் கொய்யாமல்
உடுத்தியிருக்கும் பெண்ணே!
மதுரைக்கு வழி ஏது?
பண்ணாத செம்பில் பன்னீர் கொண்டு போகும் பையா!
மதுரைக்கு வழி அதுதான்.

910 ஆலமரம் தூங்க
அவனி யெல்லாம் தூங்க
ஸ்ரீரங்கம் தூங்க
திருப்பாற்கடல் தூங்க
ஒருவன் மட்டும் தூங்கவில்லை.

911 பாதியில் பாதி நான்
பலபுறம் காட்டி நான்
நீதியில் பெரியோன் நான்
நீலங்கள் தரிப்போன் நான்
கோவில் முன் நின்று கும்பிடுவேன் நான்.

912 வாய்க்கால் வெட்டி வரப்பு வெட்டி
வைகாசி மாதம் தோப்பு வெட்டி
ஈக்கி முத்து இலை பறித்து
பாக்கு முத்துப் பணம் பறித்து
பாண்டிய ராசா கொலுவுக்கு வருகிறார்.

913 பளபள பகட்டுக்காரி
தளதள தளுக்குக்காரி
ஆயா தோட்டத்து அரக்கு மணி
ஆடி அசையும் குந்தாணி
தேடிப் பிடியடா தெள்ளுமணி.

914 கடையிலே கண்டேன்
கண்டவுடனே கொண்டேன்
கொண்டவுடனே அடித்தேன்
அடித்தவுடனே சிரித்தாள்
சிரித்தவுடனே, கடித்தேன்.

915 இருதலைக் கூருன் பொறியல்
இன்னிசை பாடுவான் கூட்டு
தாயைக் கொன்ருன் வறுவல்
அத்திக்காய்க் கூட்டு அவியல்
குதிரைக் குட்டிக் குழம்பு.

916 ஆண்: தங்கக் குடம் எடுத்து
தண்ணிக்குப் போற பெண்ணே!
உன் கணவர் எங்கே?
பெண்: செத்தவரைத் தூக்கிக்கொண்டு
வித்துவரப் போயிருக்கார் என் கணவர்.

917 கண்ணைக் குத்தித் தண்ணீர் வரும்
கமலக் கதை ஒன்று
வேரைப் பிடுங்கி மாலையிடும்
வேதக் கதை ஒன்று
சுளையை எடுத்து மாலையிடும்
சொர்ணக் கதை ஒன்று.

918 இருட்டு நேரத்திலே
எல்லோரும் பார்க்கையிலே
வீடேறிக் குதித்து
வேண்டிய பொருள் எடுத்து
பாங்காகப் பவனி வந்து
பயமின்றிப் போகிறான் திருடன்.

919 எதிர் எதிரே மங்கையர் இரண்டு பேர்
என்ன மாயமோ முகம் ஒரே மாதிரி
மதிமுக மங்கையர் இரண்டு பேர்
மயக்கும் விழிகள் நான்கு
எழுதவொண்ணா மங்கையர் இரண்டு பேர்
எல்லாம் ஒரே மாதிரி, இயம்பிடுவீர்.

920 கருப்பு வயலிலே இருக்கும்
கருப்பி அக்கா நீ சாக்கி
சிங்கார வயலிலே இருக்கும்
சிகப்பி அக்கா நீ சாக்கி
பள்ளத்துக்குள்ளே இருக்கும்
பாப்பி அக்கா நீ சாக்கி.

921 கால் நான்குண்டு மாடல்ல
முகமது நீண்டிருக்கும் நாயல்ல
மேனியது கருப்பாகும் யானையல்ல
வாலது துடப்பம் குதிரையல்ல
உடலெல்லாம் ரோமம் கரடியல்ல
உருமுகின்ற சாதி இதனை உரைப்பீர்.

922 பளபள என்று இருப்பாள்
பல நிறம் காட்டிடுவாள்
தளதள என்று இருப்பாள்

தரணி எல்லாம் சென்றிடுவாள்
கட்டழகி முகம் பார்த்திடுவாள்
பொட்டழகு வளம்-உரைத்திடுவாள்.

923 ஆறெங்கும் தூங்கி
அறுகடல் மீன் தூங்கி
சீரங்கம் தூங்கித்
திருவானைக்காவல் தூங்கி
ஊரெங்கும் தூங்கி
ஒருவன் மட்டும் தூங்கவில்லை.

924 குதிரை பாய்ந்து வர
கொடிகள் பறந்து வர
நானூறு பேர் இழுத்துவர
நாலாயிரம் பேர் திரண்டு வர
அசைந்து அசைந்து வர
ஆறு சக்கரம் உருண்டு உருண்டு வர.

925 பூமியிலே பெண் பிறந்தேன்
பிடித்தவருக்குக் கட்டுப்பட்டேன்
சாதியிலே ஈனம் ஆனேன்
சண்டைக்கு வந்து நின்றேன்
கோவில் குளங்களைக் கூட்டி வைத்தேன்
கொண்டையில் பூமுடியாப் பாவியானேன்.

926 கட்டையன் கட்டையன்
கருப்புக் கட்டையன்
கண்டவர்க்கு எல்லாம்
உருண்டைக் கட்டையன்
ஊருக்கு எல்லாம்
உறைச்ச கட்டையன்.

927 டக்டா வண்டி உடைந்து கிடக்கு
ஒக்குட நாதியில்லை
ராசா மகள் கோபமாய்ப் போருள்
கூப்பிட நாதியில்லை
ரோசாப்பூ கொட்டிக் கிடக்கு
பொறுக்க நாதியில்லை.

928 மழையிலே மழைச் சாரலிலே
வாழ்ந்திருக்கிற பெண்ணே!
உன்னை வாங்கலாம்
கூட்டிலே போட்டு அடைக்கலாம்
ரத்தம் வரக் குடிக்கலாம்
வெளியே பிடித்துத் தள்ளலாம்.

929 சிற்றுடை அணிந்திருப்பாள்
சிறு பெண்ணும் அல்ல
பூணூல் அணிந்திருப்பார்
பார்ப்பனரும் அல்ல
வளையல் அணிந்திருப்பாள்
வனிதையும் அல்ல.

930 சோறு சமைப்பாள் சொக்கன் சாப்பிட
வேலையாள் அல்ல
விருந்து படைப்பாள் வந்தவர் சாப்பிட
மனைவி அல்ல
இருந்தால் கொடுப்பாள் எங்கும் இருப்பாள்
எங்கள் சொக்கி.

931 பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த
பூலோக ராசா மகளே!
பூவில் சிறந்த பூ என்ன பூ?

எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்த
இணையில்லா ராசா மகளே!
எள்ளுக்கும் சிறிய இலை என்ன இலை?

932 மக்களும் மக்களும் நாங்கள்தான்
மகராசி மக்களும் நாங்கள்தான்
அம்மி மேலே கும்மியடிக்கிற
அம்மா மக்களும் நாங்கள்தான்
பட்டுப் புடவைக்கு முத்திரை வைக்கிற
பாவி மக்களும் நாங்கள்தான்.

933 தகதக வென்ற தாம்பாளம்
தங்கத் தங்கத் தாம்பாளம்
ஆற்றுக்குள்ளே கிணற்றுக்குள்ளே
அசைந்து மிதக்கும் தாம்பாளம்
பாதாளகரண்டி பத்துப் போட்டாலும்
எடுக்க முடியாத தாம்பாளம்.

934 மண்ணிலே பிறந்து மண்ணோடு சேர்வாள் பெண் அல்ல;
சக்கரத்தில் சுழன்று செல்லும் தேர் அல்ல;
வெயிலிற் காயும் நெருப்பில் வேகும் செங்கல் அல்ல;
கடைக்குச் செல்வாள் காரிலும் போவாள்
போட்ட தெல்லாம் தின்பாள் திருப்பியுந் தருவாள்
பண்புடன் நடக்காவிட்டால் பட்டென்று கோபிப்பாளே.

935 வாயிலிருந்து நூல் எடுப்பான்
மந்திரவாதி அல்ல
கிளைக்குக் கிளை தாவுவான்
குரங்கும் அல்ல
வலை விரித்துப் பதுங்கி இருப்பான்
வேடனும் அல்ல.

936 கத்திச் சடை பின்னியிருக்க
முத்துச் சரம் கோர்த்திருக்க
சாத்தின கதவு இருக்க
ஏற்றின விளக்கு இருக்க
நாத்தனார் படுத்திருக்க
இராத்திரி வந்த திருடன் யார்?

937 தங்கக் கொப்பரை கிழிந்து கிடக்குது
தைக்க நாதியில்லை
ரோசாப்பூ பூத்துக் கிடக்குது
பொறுக்க நாதியில்லை;
ராசா மகள் கோபித்துக்கொண்டு போகிறாள்
கூப்பிட நாதியில்லை.

938 படுத்து எழுந்திருந்தேன்
பம்பரம்போல் சுற்றி வந்தேன்
ஆயி அடித்தாள் என்று
அப்பனிடம் சொன்னதற்கு
அவன் அக்கினிக் கோட்டை கட்டி
அப்பவே விலை கூறிவிட்டான்.

939 திண்ணையிலே பூத்திருக்கும்
தேவர் கதை ஒன்று!

கல்லை உடைத்து வாயிலே போட்டால்
கர்ணன் கதை இரண்டு!
வேரைப் பிடுங்கி வாயிலே போட்டால்
வீமன் கதை மூன்று!

940 வட்டப் பூந்தோட்டத்திலே
வரிசையாய் மரம் இருக்கு
நெட்டை மாப்பிள்ளை
எட்டி நடை போடுகிறான்
குட்டைப் பெண்ணுக்குக்
கூட வர முடியவில்லை.

941 கட்டி மாம்பழம் தொப்புன்னு விழுந்தது
பார்த்தது இரண்டு பேர்
எடுத்தது ஐந்து பேர்
தின்றது முப்பத்திரெண்டு பேர்
ருசி கண்டது ஒருவர்
இவர்கள் யார், பெயர் உரைப்பீரே.

942 தலைக்கு மேல் அலரும் பூ
தண்டின் பக்கம் காயும் பூ
சூரிய கர்வம் குறைக்கும் பூ
சுகம்தர விரியும் பூ
வட்டமான பூ வாடாத பூ
என்னவென் றியம்புவீரே.

943 சக்கரம்போல் வடிவமுண்டு தாமரை யல்ல,
தண்ணொளி தானுமுண்டு மதியமல்ல,
பக்கமெல்லாம் அரும்புண்டு கண்களல்ல,
பாதி அதில் உருவுண்டு படமுமல்ல,
அது இன்றேல் துக்கம் அதிகரிக்கும்
அதன் பெருமை சொல்லொணாது.

944 அடியடி தென்னஞ் சோலை
அதில் ஒரு பையன் காவல்
முத்தையா செட்டி காவல்
முத்தையா முதலி காவல்
இத்தனை காவலுக்குள்
எப்படி வந்தாய் பெண்ணே!

945 உடல் எல்லாம் பளபளப்பு; பட்டாடை அல்ல,
உச்சியிலே கொண்டை இருக்கும்; சேவலும் அல்ல,
கழுத்து உயர்ந்து இருக்கும்; ஒட்டகம் அல்ல,
கண்கள் அநேகம் உண்டு; இந்திரனும் அல்ல,
வாலோ நீண்டிருக்கும்; குரங்கு அல்ல,
வழி அறிந்து சொல்வாய் நீயே கருத்துடனே.

946 பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனி
சந்திர பிறை ஆபரணம் பூண்டிருப்பாள்
உண்டால் அமிர்தரசம் நல்கிடுவாள்
எட்டெழுத்துப் பெயருடையாள்
இரண்டுடன் மூன்று நான்கையும் நீக்கினால்
இருக்கும் பொருளது முக்கனியே.

947 மஞ்சள் கன்னி நாலுபேர்
சிவப்புக் கன்னி நாலுபேர்
கருப்புக் கன்னி நாலுபேர்
பச்சைக் கன்னி நாலுபேர்
இந்தப் பதினாறு பேருக்கும்
இரண்டு ஆம்படையான்.

948 முத்து முத்துச் சேலைக்காரி
முப்பது பொன் வேலைக்காரி
தண்டைக் கொலுசுக்காரி
தாவரத்து வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்
கவலைப் படுவானேன்?

949 கருப்பான ரூபமுடன் உள்நடப்பாள்
வெளியே போகாள்
காசைக்கொடுத்து வீட்டுக்கு அழைத்தால்
நேர்த்தியாய் வருவாள்
ஊண் கொடுத்தால் வேலை செய்வாள்
உறங்க மாட்டாள்
உள்ளுக்குள்ளே பேசிடுவாள் பெண்ணுமல்ல
காலையில் எழுந்தவுடன் இவளைப் பார்ப்பார்
கணக்கில்லை கோடான கோடிப்பேரே.

950 மண்பிசைந்து வேலைசெய்வான் குயவனல்ல
வங்காளம் போய்வருவான் செட்டியல்ல
கண்ணுண்டு மூக்கில்லை தேங்காய் அல்ல
காலுண்டு தலையில்லை கபந்தனல்ல
இன்னுண்டு சிலபேர்க்கு இச்சையாவான்
ஈசனுக்கும் மாயோனுக்கும் பெரியோன்தானே.

951 கிளை வளர்ந்து பூத்திடும் பூ மல்லிகைபோல்
கிஞ்சிற்றும் வாசமில்லை முகர்ந்தோமானல்
நிறமது பிஞ்சு பச்சை நெல்லி ரூபம்
காய் சிகப்பு பழமது கருத்திருக்கும்
பழத்தினுள் கொட்டை இரட்டை இனிப்புண்டு
பழத்தைத் தின்ஞர் கொட்டையை
உட்கொள்வாரே.

952 காலு நாலு மாடு ரெண்டு
கண்ணு நாலு பாலில்லே
வாலுதானு மில்லே காண்
அந்த மாட்டிற்கு மேலே
அனைவர்களு மேறுவார்கள்
ஆடுமல்ல மாடுமல்ல ஆராய்ந்து பார்.

953 வட்டமாகவே இருக்கும் முட்டையல்ல
வருணத்தால் வெளுப்பென்றே சொல்லலுற்
சட்டமாக உலகமெங்கும் சுற்றி ஓடும் [றோம்
சந்திரன் என்பீரேல் அதுவுமல்ல
திட்டமாக அவ்விடத்திற் பெண்ணொன் றுண்டு
திருமருவு பாற்கடல் திருவுமன்று.

954 மேதினியில் மெல்லி நல்லாள் கருத்த
மேனியுடையாள்
வாயுண்டு பேசமாட்டாள் வம்புஞ்
செய்யமாட்டாள்
கரங்களுண்டு கால்களுமுண்டு நடக்கமாட்டாள்
ஆழத்தில் இறங்குவாள் அகப்பட்டதை
அள்ளுவாள்
இவள் படுநீலி மாநிலத்தில் மங்கையல்ல
மகிழ்வுடனே இக்கதையை உரைத்திடுவீர்.

955 பட்டையுண்டு கட்டையில்லே
இலேயுண்டு, கிளேயில்லே
பூவுண்டு விதையில்லே
காயுண்டு பழமுமுண்டு
கன்றுகளு மீன்றவுடன்
கவலேயும் கொண்டிடுவான்.

956 அவனிதனில் ஓர் அற்புதத் தருவுண்டு
அதற்கு ஈராறு கிளைகளுண்டு
கிளைக்குக் கிளை நான்குண்டு
சீராறும் கிளைக்குச் சிறுகிளை ஏழுண்டு
கிளைக்குப் பத்துப் பத்துப் பத்து கிளையுமுண்டு
நீல இலை பாதி; வெண்மை இலை பாதி,
ஆக இலை ஒன்று.

957 எட்டு எழுத்தில் ஒரு ஊரின் பெயர்
ஒன்றும் இரண்டும் சேரில் செல்வம்
மூன்றும் நான்கும் சேரில் குளம்
மூன்றும் ஐந்தும் ஒன்றும் சேரில் கங்கை
மூன்றும் ஆறும் சேரில் பெருமை
ஏழும் எட்டும் சேரில் பருகு.

958 1. அரசர்களில் ஒருவர் பெயர்
2. கொண்டவளின் பெயர்
3. ஒரு நதியின் பெயர்
4. உடலின் பெயர்
5. ஒரு மரத்தின் பெயர்
இந்த ஐந்து பெயர்களின் நடு எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் விநாயகர் வரவேண்டும்.

959 1. சனக நகரின் பெயர்
2. அனுமான் பெயர்
3. பார்வதி தேவியின் பெயர்
4. கொண்டவளின் பெயர்
5. ஒரு அவயவப் பெயர்
6. ஒரு இராகத்தின் பெயர்
இந்த ஆறு பெயர்களின் நடு எழுத்துக்களையெல்லாம் ஒன்று சேர்த்தால் ஒரு ஸ்தலத்தின் பெயர்.

960 1. நன்மையின் பெயர்
2. வாசனைப் பெயர்.
3. கமலப் பெயர்
4. சிவன் பெயர்
5. ஒரு ஆண்டின் பெயர்
6. ஒரு மரத்தின் பெயர்

இப்பெயர்களின் நடு எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் விஷ்ணுவின் பெயர்.

961 உச்சியிலே கண்ணுண்டு குடுமியுண்டு மனிதனல்ல
உடல் முழுதும் ரோமமுண்டு கரடியல்ல
உருட்சியான வடிவமுண்டு பந்தல்ல
உடலெல்லாம் ஓடுண்டு ஆமையல்ல
உட்பாகம் வெளுத்திருக்கும் முத்துமல்ல
செக்கிலிட்டு ஆட்டினல் எண்ணெய்வரும் எள்ளுமல்ல
சுபத்துக்கும் அசுபத்துக்கும் முன்வந்து நிற்கும்
சொகுசான சுந்தரனே சொல்லப்பா நீயுந்தானே.

962 கடலோரத்திலே விரையூணி
கடலோரப் பக்கம் வேரோடி
திண்டிவனத்திலே பூப்பூத்து
திருவண்ணமலையில் காய் காய்த்து
அம்பத்தூரில் பழம் பழுத்து
அந்தப் பழத்தில் ஒரு பழமாம்
அம்மனுக்கும் அபிஷேகமாம்
ஆரவல்லியே சொல்லு நீயே.

963 தலையில்லை, கண்ணுண்டு;
மார்பில்லை, முதுகுண்டு;
இடுப்புண்டு, வாலில்லை.
கையுண்டு, நகமில்லை;
காலுண்டு, பாதமில்லை;
உடலுண்டு, உயிரில்லை;
ஒரு பொருள் கண்டுரைப்பீர்
உத்தமரே உண்மை கொண்டே.

964 கோயிலும் இல்லாமல் குளமும் இல்லாமல்
குந்திக்கிட்டுத் தட்டுறான் ஒருவன்
நோயும் இல்லாமல் நொடியும் இல்லாமல்
நொக்கிக்கிட்டுக் கிடக்கிறான் ஒருவன்
யானையும் இல்லாமல் குதிரையும் இல்லாமல்
ஏறிக்கிட்டு இருக்கிறான் ஒருவன்
வேலையும் இல்லாமல் வெட்டியும் இல்லாமல்
வீதிக்கு வீதி சுத்துகிறான் ஒருவன்.

965 உயிரில்லாமல் ஓடித் திரிவான்
மூக்கு இல்லாமல் மூச்சு விடுவான்.
வாயில்லாமல் தண்ணீர் குடிப்பான்
வயிறில்லாமல் கறியைத் தின்பான்
ஒளிக்கண்ணுண்டு காதப் பார்வையுண்டு
காற்றிற்கு அஞ்சான் மழைக்கும் அஞ்சான்
காட்டிலும் போவான் மேட்டிலும் போவான்
ஆற்றைக் கடப்பான், ஆயிரம்மைலும் கடப்பான்
அலறித்திரிவான்.

966 நெட்டுடலாய் நீண்டிருக்கும் அரவம் அல்ல
நெருப்பில் விளையாடும் சிவனுமல்ல
கட்டுமுட்டாய் வில் பிடிக்கும் விசயன் அல்ல
கண்டவர் பயப்படுவார் கள்ளனுமல்ல
வட்ட முகத்தில் துணி கிளம்பும் மேகம் அல்ல
வாயினால் தின்று கக்கும் வௌவாலுமல்ல
பட்டணத்தைச் சுட்டு அழிக்கும் அனுமார் அல்ல
பாரினில் இதற்குமோர் இணையுமில்லையே.

967 மண்டலத்திற் பிறந்த திரு மங்கை நல்லாள்
வளம்பெறச் செங்கனன் மூழ்கி வந்த மெய்யாள்
பெண் தகைமையாள் நீரிற் ருக முள்ளாள்
பெருவாயர் உதடுடையாள் பேசமாட்டாள்
தண்டமதற் கஞ்சிடுவாள் பரியமாறற்
ருயகம் நீங்கிக் கொண்டோ ரில்லஞ் சார்வாள்
பண்டு தமிழாசிரியர்க் கன்னை யென்னும்
பாவையை இன்னவளென்று பகருவீரே.

968 விருது பெறும் ஒன்பதுபேர் கூட்டத்தாரில்
வெள்ளையனுக்கு இடந்தருமோர் மேன்மையாளன்
கிருதுடனே காடு மலைதனில் வாழ்ந்தாலுங்
கீழ்ப்படிந்து நாட்டில் நடமாடி நிற்பான்
கருதுசிறு வயதினிலே கானக்காரன்
கருவுயிர்த்த பெண்களுக்கும் நன்மை செய்வான்
வருதுணையாய்த் தேவருக்கும் யாவருக்கும்
மா உபகாரியை அறிந்து வாழ்த்துவீரே.

969 மேகநிறங் கொண்டிருக்கும் மழை பெய்யாது
விளையாடுஞ் சண்டை செய்யும் கைகாலில்லை
ஆகமதில் ஓடிருக்கும் ஆமையல்ல
அதிவெப்பம் பெறிற் சீறும் சர்ப்பமல்ல
மாகணக்காளிகள் மதிப்பார் கணக்கனல்ல
வகிர்ந்தாலும் பலன் தரும் பூதேவி யல்ல
பாகமுதல் மேலாகப் பெறும் நல்லோரே
பண்புடனிக் கவிக்கு விடை பகருவீரே.

970 பச்சை நிறங் கொண்டிருக்கும் நெடுமாலன்று
பரவுமகான் பெயருறுமோர் மகானுமன்று
நிச்சயமாக் கொம்பிருக்கும் மிருகமன்று
நிலத்தில் வயித்தியர்க்கெதிரி யமனுமன்று
கச்சிருக்குந் தனம் பெருக்குந் தாசியன்று
கருத்துணர்ந்து வைதிகரும் பட்சங் கொள்வார்
துச்ச மெனினுஞ் சுகமே தந்து காக்குஞ்
சூரமுள்ள பொருளறிந்து சொல்லுவீரே.

971 தாயினிடம் பாலுண்ணூர் அயலார் வேண்டித்
தரப்பாலும் பழமுண்பா ரிருபிறப்பார்
ஏயமகிழ்வோடு கற்றதெல்லாங் கொண்டு
இளைக்காமற் பேசிடுவா ரின்பஞ் செய்வார்
காயும்வினை சிறைப்படுவார் பிள்ளைப்பேறார்
கனஞ்சாரும் பாசுபெற்றோர் கன்னிமார்தம்
வேயனைய தோள் சேர்வார் நீண்டமூக்கர்
விவேகிகளே யிவராார் தாம் விள்ளுவீரே.

972 மாதவையுங் காதுமிலா னிரண்டும் காத
வழியுமொரு நிமிஷமென் மனத்திலெண்ணிப்

பூதலத்துப் பொருள்கவர விளங்கு மெந்தப்
போதினுஞ் செல்வான் றண்டலையும் மதிப்பான்
பாதக மென்றஞ்சாத குரு சண்டாளன்
பகர்சாமத் துரோகி வழிபடும் பாடென்றும்
ஓதிநிற்பான் மதுபான னிவனின்றனென்
றுளங்களிக்க அவனிமிசை யுரைத்திடீரே.

973 சாதுவென நினைத்திடினுந் தன்னினத்தார்
தனைப்பகைக்க தலைநீட்டிச் சண்டை செய்யும்
ஏதுவுடன் இடைக் கடங்குந் தீத்தான் ஏறற்
கிசையும் வளர்த்தவர்களு மோகிக்க மேவி
ஓதுமுரு வழியுமெலத் துலையிலேறும்
உவந்துட லியண்ணிய வுத்தரியமு மீயுஞ்
சூதுதன முடையவர் சோதிடர் பாற்றம்பேர்
துலங்குமந்தப் பொருளறிந்து சொல்லுவீரே.

974 சொல்லுறு நற் கீர்த்திபரர் அயலார் செய்யுஞ்
சூதினைக் கண்டது நீக்கிச் சுகுண மேற்கும்
நல்லறிவார் நன்னடையார் போகவான்கள்
நாவினில் மந்திரம் போலும் வழுத்தநிற்பார்
மெல்லியர்க்குந் தூது செல்வார் சயனத்திற்கு
மேவிவந்து சுகங் கொடுப்பார் வியப்புஞ்
செய்வார்
கல்லியல பிதாமகனு மெச்சவாழுங்
காரணரின்னு ரெனவே[illegible] கழறுவீரே.

975 அண்டர்தங் கோனூர்தி நிகர் கருப்பின் மிக்க
அழகுடையாள் புவிமயங்கக் குரல் காண்பிப்பாள்
கொண்டலைக் கண் டயர்ந்திடுவாள்
கொடியர்தாபங்
குலவியிருந்தகன்று வந்த கொடியாள் ஓங்கி
மண்டலத்தில் மணக்கோலஞ் செய்வா னுக்கு
மனங்கலந்த துணையாகி வசந்த மாகும்
பெண்டகையாள் இவளையின்னு ளென வறிந்து
பேருலகிற் புலவீர்காள் பேசு வீரே.

976 கோளேந்துங் காட்டிலுறும் விலங்குமல்ல
குணங்காட்டி வசப்படுத்தும் வேசியல்ல
வாளேந்து மெதிர்த்திடும் போர் வீரனல்ல
மாதர்மகிழ்ந் திடச் சேருங் கணவனல்ல
தூளேந்தும் விபூதிபெறும் சைவரல்ல
சொலும் பணப்பைக் கிடங்கொடுக்கும்
பெட்டியல்ல
கேளேந்துந் தமிழ்ப் புலவீர் இதுகண் டல்லோ
கெம்பீரமுடன் பொருளைக் கிளத்துவீரே.

977 வெள்ளையப்பன் வரந்தனிற் றேன்றியண்டர்
மிகவிரும்பத் தீத்தான் மெய்க்குரு கடாட்சங்
கள்ளமிலா தடைந்துருவம் வேரு யுள்ளே
கனிந்துருகி யாவருக்குங் காட்சியாகித்
தள்ளரிய வினைவசத்தாற் சிறையாளுலுந்
தக்கசுத்தியென வெவர்க்கு மின்பநல்கக்
கொள்ள விற்க வுடன்பட்டு மிருக்குமந்தக்
குணமுடைய பொருளறிந்து கூறு வீரே.

978 கோபமே விருதெனக் கொள்வீரன் சந்தைக்
கூட்டுடையார் கூடிடச் சற்றடங்கி நிற்பான்
பாபவகங் காரி யென்று மெரிச்ச லுள்ளான்
பணம் பொதிந்த பைகாட்டும் பெருவயிற்றன்
தாபதர் கும்பிடச் செய்வான் வணங்கானேழைத்
தையலர்க்கே சரண்புகுவான் விலையுமாவான்
மாபசப்பன் பரப்பாகப் பின் சிவக்கும்
வம்பனிவன் றனை அறிந்து வழுத்து வீரே.

979 தகுதிபெறு முலகினிற்சிற் சிலர்கள் வேண்டத்
தக்கவன் வெட்டுணி நெடியன் சமயம் பார்த்துப்
புகலருஞ் சீர்திருத்தலைச் செங்காட்டிற் சேரும்
புதுத்திருட்டுப் பயல்களின் மேற் புலிபோற்
பாய்ந்து
வகிருறுந்தம் பற்களினு லழுத்திக் கொல்லும்
வல்லாளன் இதுதவிர மற்றைக் காலஞ்
சுகமுடன் மூலையிற் படுத்துக் கொண்டிருப்பான்
சூதனிவன் றனையறிந்து சொல்லு வீரே.

980 நீராடு மலர்பெறும் பூந்தடமுமல்ல
நிவேதனத்தான் மகிழுறும் பூசாரியல்ல
வாராருங் கொம்பேந்தும் விருட்சமுமல்ல
வளம் பெறு மந்திரத்தாடுஞ் சர்ப்பமல்ல
சீரார் பாசாங்குச முண்டு மையுமல்ல
திகழ் பஞ்சக் கரம் விளங்குஞ் சிவனுமல்ல
வேராரும் பாரதம் வெற்பினிற் பொறித்த
விநாயகரு மல்லவிது விள்ளு வீரே.

981 பச்சு பச்சென்றிருக்கும் வீதியில்
ஆறு பாடசாலைக் கோட்டைக்குள்
நாலு பாடசாலைச் சிங்கிலி
நாலு பேர் தூதர்கள் சேர்ந்து
சங்கிலிக்காரன் சங்கிலிக்காரி
இருவரையும் கட்டிவிட்டு
தூதர்கள் செல்வார்கள்
தேவர்கள் வாழ்த்துவார்கள்.

982 ஆறுபேர் தம்முளொருவன் குணங்கொள்
ஆங்காரியை வரையு மடக்க வல்லாள்
கூறரிய நாற்றிசைக்கண் மகிழவுள்ளங்
கொடுவருவா ளுயர்மணஞ்சேர் வசியக் காரி
பேறுபெறு மூவர்தமி லிடை யுளாரின்
பேராவேசந் தவிர்க்க விருபாலாகி
வீறுதரு மொருத்தி யவளுமை மாதல்ல
மெல்லியை யின்னவளென்று விளம்புவீரே.

983 தான்முயன்றே தோன்றி நிற்கு முருகனல்ல
தகுநீரிற் பள்ளிகொள்ளும் நெடுமாலல்ல
நான்முகங் கொண்டிருக்கு மொரு பிரமனல்ல
நாற்காலுண்டது நடக்குங் காலுமல்ல
வான் முன் முன்னோய் தவிர்க்கும் வைத்தியனல்ல
வண்கவிஞர் வாதமுமாம் விறைவுமன்றாந்
தேன் முதிர் செங்கனி மொழி நல்லாரைக்காணிற்
றியங்கு மந்தப் பொருளதுவாஞ் செப்புவீரே.

984 பந்திபெறுங் கொண்டையுண்டு முடிப்பதில்லை
பணப்பையைப் பிடித்திட்லுண் டவதில்லை
விந்துவுண்டு மகவுகளுண் டணைதலில்லை

விழிகள் பலவுண்டவற்றிற் புலமதில்லை
வந்துநின்று நடம்புரியும் பின்பாட்டில்லை
வளர்சேயைத் தாங்குதலுண்டு கங்கையில்லை
